தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

மாற்றம்

விலை ரூ.15– மலர் 22–இதழ் 1– ஏப்ரல்-மே 2020

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

விழிப்புணர்வு பணியில் மகளிர் சுய உதவிக் குழுவினரின் பங்கு

முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர் (பொ) மற்றும் செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

அன்புள்ள சகோதரிகளே,

பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களான உங்களுடன் எனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

இன்று உலகம் முழுவதிலும் உள்ள நாடுகள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக போராடிக் கொண்டிருக்கின்றன. நம் நாட்டிலும் அந்த கொடிய கொரோனா வைரஸ் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. நம் தமிழ்நாடு அரசு கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அரசுத் துறைகள் அனைத்தும் கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்க போர்க்கால அடிப்படையில் அயராது செயலாற்றி வருகின்றன.

எந்த செயல்பாடுகளிலும் முன்னிற்கும் நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு நடவடிக்கையிலும் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்களான நீங்களும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக பல்வேறு ஆக்கப்பூர்வமான பணிகளை மேற்கொண்டு வருகிறீர்கள் என்பது பெருமைக்குரியதாகும்.

கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்கும் முகக் கவசம், கை சுத்திகரிப்பான் திரவம், சோப்பு, கிருமிநாசினி பவுடர் போன்றவற்றை தயாரித்து வழங்கும் பணியில் நமது சுய உதவிக் குழு மகளிரும் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதுடன், கொரோனா குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணிகளையும் செய்து வருகின்றனர். அவர்களை எண்ணி நான் பெருமை கொள்கிறேன்.

இன்னும் சில நாட்களுக்கு நாம் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம். அரசின் நடவடிக்கைகளுக்கு நம்முடைய முழு ஒத்துழைப்பையும் தருவது நமது கடமை. அத்தியாவசிய தேவையின்றி வெளியில் செல்வதைத் தவிர்த்தல், தனி மனித இடைவெளியைக் கடைபிடித்தல், முகக் கவசம் அணிதல், கிருமி நாசினியைக் கொண்டு அடிக்கடி கைகளைக் கழுவுதல், வெளியில் செல்லும் போது குடைகளைப் பயன்படுத்துதல், தண்ணீரை நன்கு காய்ச்சி வடிகட்டி குடித்தல், சத்தான உணவு வகைகளையே உண்ணுதல் உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கடைபிடிப்பது மிகவும் அவசியம்.

சுய உதவிக் குழு மகளிர் என்றாலே மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருப்பவர்கள் என்பதை மீண்டும் நிரூபிக்கும் வண்ணம் கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான நடவடிக்கைகளிலும் நீங்கள் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக செயல்பட வேண்டும் என்றும், கொரோனாவை விரட்டியடிக்கும் நடவடிக்கைகளில் உங்களின் பங்களிப்பு மற்றவர்கள் பாராட்டும் வகையில் அமைய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,



மேலாண்மை இயக்குநர் (பொ)

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் | wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

protncdw1@gmail.com

குறளும்-பொருளும்

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்

ஒருவரோடு ஒருவர் நட்பு கொள்வதற்கு அருகருகே இருப்பதோ, நெருங்கிப் பழகுவதோ வேண்டியதில்லை. இருவரது எண்ணங்களும் ஒத்திருந்தாலே நட்பு என்னும் தோழமையை கொடுக்கும்.

உள்ளே...

கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகளில் தமிழக அரசின் சிறப்பான செயல்பாடுகள் 05

கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்குதல் 07

மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு பொருட்கள் விற்பனையகம் திறப்பு 09

கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பங்களிப்பு 10

கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகளில் நகர்ப்புற வாழ்வாதார இயக்க சுய உதவிக் குழுக்களின் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள் 16

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU GKY) 24

கொரோனா தடுப்புப் பணியில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் பணிகள் 27

முற்றம் வாசகர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு

அச்சு மற்றும் வெளியீட்டு செலவினங்கள் அதிகரித்துள்ள காரணத்தினாலும், தற்போது மாறிவரும் சூழலுக்கேற்ப முற்றம் இதழை புதிய தொழில்நுட்ப வடிவில் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ள காரணத்தினாலும் சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியாக விளங்கி வரும் நமது முற்றம் இதழின் விற்பனை விலை மற்றும் ஆண்டு சந்தா கட்டணங்கள் ஜூலை 2020 முதல் கீழ்கண்டவாறு மாற்றம் செய்யப்பட உள்ளது என்பதை அனைத்து முற்றம் வாசகர்களுக்கும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

முற்றம் இதழின் தனிப்பிரதி / சந்தா விபரம்	தற்போதைய விலை	ஜூலை 2020 முதல் மாற்றம் செய்யப்படவுள்ள புதிய விலை	ஜூலை 2020 முதல் முற்றம் வாசகர்களுக்கான சலுகை விலை
முற்றம் இதழின் தனிப்பிரதி	ரூ. 15	ரூ. 20	ரூ. 20
ஒரு ஆண்டு சந்தா	ரூ. 180	ரூ. 240	ரூ. 200 (தள்ளுபடி ரூ. 40)
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 360	ரூ. 480	ரூ. 400 (தள்ளுபடி ரூ. 80)
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 540	ரூ. 720	ரூ. 600 (தள்ளுபடி ரூ. 120)

முற்றம் இதழின் வாசகர்கள் அளித்து வரும் தங்களின் ஆதரவினை இவ்விதழுக்குத் தொடர்ந்து வழங்கி உற்ற தோழியாய், உறுதுணையாய் என்றும் இருக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

– முற்றம் இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்

மலர் 22
இதழ் 1
ஏப்ரல்-மே 2020
விலை ரூ.15

● கௌரவ ஆசிரியர்கள்

முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர் (பொ) மற்றும்
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப.,
தலைமை செயல் அலுவலர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

● பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்

எஸ். சின்னப்பன், செயலர், முற்றம்

● ஆசிரியர் குழு

கோ. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

ஜா. சம்பத், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

ஜே. கணேஷ் கண்ணா, கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜி. சரஸ்வதி கணேசன், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

சி. கே. வீரணன், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

கே. சுமதி, கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

● நிர்வாக ஆசிரியர்

சி. சந்தோஷினி சந்திரா, பொது மேலாளர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

● நிதி நிர்வாகம்

அ. நிருபா ராணி, நிதி ஆலோசகர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

● பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்

கூ. பாபு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

● துணை ஆசிரியர்: ஏ. கண்ணன்
● முதுநிலை கணக்காளர்: சு. சசிகலா
● பிழை திருத்துபவர்: எஸ். எஸ். ரவிச்சந்திரன்
● கணினி வடிவமைப்பு: டி. ராஜரத்தினம்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஆசிரியர், 'முற்றம்', தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை - 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413
தொலைநகல் : 044 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

தனித்திருப்போம்... விழித்திருப்போம்...

அன்புள்ள வாசகர்களுக்கு,

முதல் உலகப் போர், இரண்டாம் உலகப் போர் பற்றி கேள்விப்பட்டிருக்கின்றோம். சிலர் பார்த்தும் இருக்கின்றனர். இந்தப் போர்கள் பல நாடுகளுக்கிடையே நடந்தவை. ஆனால் உலக நாடுகள் அனைத்தும் இணைந்து ஒரு பெரிய எதிரியான 'கொரோனா' எனும் கொடூரமான நச்சுக் கிருமியை எதிர்த்து போராடி வருவது ஒரு விந்தையான அனுபவமாக உள்ளது. இந்தப் போரில் பல உயிர்களைக் காப்பாற்ற தங்கள் உயிர்களைப் பணயம் வைத்து போராடி வரும் மருத்துவத் துறையினர், காவல் துறையினர், தூய்மைப் பணியாளர்கள், அரசு அலுவலர்கள் / ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் அனைவரின் சேவைக்கும் 'முற்றம்' தலைவணங்குகிறது.

கண்களுக்குத் தெரியாத எதிரி; கண்ணிமைக்கும் நேரத்திற்குள் வேகமாக தாக்கும் எதிரி; சாதி, மதம், இனம், மொழி, ஏழை, பணக்காரர் என எவ்வித பாகுபாடும் இன்றி உடனே தொற்றிக் கொள்வதோடு, உடனுக்குடன் கிடைக்கும் இடமெல்லாம் பரவிக் கொண்டிருக்கும் எதிரி; தொற்றிற்கான அறிகுறியே தெரியாமல் கண்களை மறைத்து மரணப் படுக்கைக்கு அழைத்துச் செல்லும் எதிரி; பெரிய அளவில் கூட்டம் சேரச் சேர குஷியாகி விடும் எதிரி; ஒழிந்து விட்டது என்று பெருமூச்சு விடுவதற்குள் மீண்டும் எழுந்து வந்து தாக்கும் வீரியமான, வியப்பிற்குரிய, அதிசயமான, ஆபத்துமிக்க இந்த கொடிய எதிரிதான் 'கொரோனா' என்ற நச்சுக் கிருமி.

இப்பொழுது நாம் தற்காலிகமாக இதிலிருந்து மீண்டெழுந்தாலும், மேலும் ஒரு சில நாட்களுக்கு மறைந்திருந்து தாக்கக் கூடியது இந்த மர்ம கிருமி. இதிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நமக்கு விழிப்புணர்வு தேவை. ஒவ்வொருவரும் தங்களை தனிமைப்படுத்திக் கொள்வது, முகத்தை முகக்கவசம் கொண்டு மூடுவது, அடிக்கடி கைகளை சோப்புப் போட்டுக் கழுவுவது உள்ளிட்டவைகள் முக்கியமான வழிமுறைகள் ஆகும். இந்த கொரோனா நமக்கு பெரும்பாடத்தை புகட்டியுள்ளது.

தனி மனித சுகாதாரம் / சுற்றுப்புறச் சுகாதாரம் கிருமிகளை அண்டச் செய்யாது. கிருமி எதிர்ப்பு திறனைக் கொண்ட பொருட்களான மிளகு, திப்பிலி, இஞ்சி, சுக்கு, எலுமிச்சை ஆகியவற்றை உணவில் சேர்த்துக் கொள்வது அவசியமாகிறது. குடும்ப விழாக்கள் / சமூக விழாக்களில் அதிகம் கூட்டம் சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இது போன்ற பேரிடர்களை சமாளிப்பதற்கு எவ்வகையிலாவது ஒரு வழியில் மிக சிறிய அளவிலான சேமிக்கும் பழக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.

'தனித்திருந்து, விழித்திருந்து கொரோனாவை வென்றெடுப்போம்" என முற்றம் இதழ் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,

(எஸ்.சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்

கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகளில் தமிழக அரசின் சிறப்பான செயல்பாடுகள்

தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று பரவலை தடுத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் தலைமையிலான மக்கள் நல அரசு போர்க்கால அடிப்படையில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக அனைத்துத் துறை அமைச்சர் பெருமக்களும் தங்களின் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுடன் கொரொனா வைரஸ் தொற்று பரவலுக்கு எதிராக களமாடி வருகின்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 29.04.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும், நிவாரணப் பணிகளை தீவிரமாக மேற்கொள்வது குறித்தும், பொது மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் தங்கு தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வது குறித்தும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி மூலமாக ஆய்வு செய்தார்கள். இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர் செல்வம், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. ஆர். பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. ஜே. கே. திரிபாதி, இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 05.05.2020 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலக வளாகத்தில், சென்னை மாநகரில் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்த புகைப்படக் கண்காட்சியினை பார்வையிட்டார்கள். உடன் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி, வருவாய் நிர்வாக ஆணையர் / முதன்மை செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. கோ. பிரகாஷ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 03.04.2020 அன்று சென்னை, வேளச்சேரி குருநானக் கல்லூரியில், மத்திய அரசு அறிவித்துள்ள ஊரடங்கு உத்தரவால் சொந்த ஊர்களுக்கு செல்ல முடியாத வெளி மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள முகாமைப் பார்வையிட்டு, அங்கு தங்கியுள்ளவர்களுக்கு உணவு மற்றும் உடைகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி, மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், சட்டமன்ற உறுப்பினர் திரு. விருகை வி. என். ரவி, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. கோ. பிரகாஷ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 01.04.2020 அன்று சென்னை பட்டினப்பாக்கத்தில் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் பொதுமக்களுக்காகத் தயாரிக்கப்படும் உணவின் தரத்தினை ஆய்வு செய்தார்கள். உடன் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையர் திரு. ஜி. பிரகாஷ், இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 01.04.2020 அன்று மயிலாப்பூர் காமராஜர் சாலையில் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் உணவருந்த வந்த பொது மக்களிடம் உணவின் சுவை மற்றும் தரம் குறித்து கேட்டறிந்தார்கள். உடன் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையர் திரு. ஜி. பிரகாஷ், இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.

கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்குதல்

தமிழகத்தில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்குதலில் இருந்து மக்களைக் காக்கவும், கொரோனா நோய் பரவாமல் தடுக்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எடுத்து வரும் நடவடிக்கைகள் அனைத்துத் தரப்பினரின் பாராட்டுகளையும் பெற்றுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைகளின்படி அனைத்துத் துறை அமைச்சர்களும் பல்வேறு நடவடிக் கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதன்படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்களால் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோயம்புத்தூர் மாவட்டம், காந்தி காய்கறி மார்க்கெட்டில் விசைபம்பு மூலம் கிருமி நாசினி தெளிக்கும் பணியினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் மேற்கொண்டார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. பி,ஆர்,ஜி.அருண்கமார், திரு. அம்மன் கே.அர்ச்சுனன், மாநகராட்சி ஆணையாளர் திரு.ஷ்ரவன்குமார், மாநகராட்சி துணை ஆணையாளர் திரு.பிரசன்னா ராமசாமி, மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

கோயம்புத்தூர் குனியமுத்தூர் கூட்டுறவு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க பொது விநியோக கடையில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் கொரோனா வைரஸ் தொற்று விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களுடன், நிவாரண நிதி மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கினார்கள். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன் அவர்கள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

கோயம்புத்தூர் உக்கடம் பேருந்து நிலையத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள காய்கறி மார்கெட்டில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. பி,ஆர்,ஜி.அருண்கமார், திரு. அம்மன் கே.அர்ச்சுனன், மாநகராட்சி ஆணையாளர் திரு.ஷ்ரவன்குமார், துணை ஆணையர் திரு.பிரசன்னா ராமசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன் அவர்கள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் தலைமையில் நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மாநில அளவிலான ஆலோசனைக் கூட்டம் 06.05.2020 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. கா. பாஸ்கரன், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. த. ந. ஹரிஹரன், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் சி. என். மகேஸ்வரன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் டாக்டர் கே. எஸ். பழனிச்சாமி, இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு. எஸ். பழனிச்சாமி, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொ) மற்றும் செயல் இயக்குநர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் தலைமை செயல் அலுவலர் திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் (பணிகள்) திரு. பி. குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் டாக்டர் த. பிரபுசங்கர், இ.ஆ.ப., உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், கிண்டி இந்திய தொழில் நுட்ப கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளள 418 படுக்கைகள் கொண்ட கோவிட்-19 மையத்தை சிறப்பு அதிகாரி / வருவாய் நிர்வாக ஆணையர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., 08.05.2020 அன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் சிறப்பு குழு அலுவலர் / நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. கா. பாஸ்கரன், இ.ஆ.ப., மண்டல கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் (பொ) முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., தெற்கு வட்டார துணை ஆணையாளர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஷ், இ.ஆ.ப., உட்பட அலுவலர்கள் உள்ளனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு பொருட்கள் விற்பனையகம் திறப்பு

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்கும் வகையில் கூட்டமான இடங்களுக்கு செல்பவர்கள், காய்ச்சல், சளி, இருமல் ஆகிய அறிகுறி உள்ளவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதுகாப்பு முகக் கவசம் அணிந்து கொள்ள சுகாதாரத் துறை அறிவித்துள்ளது. இந்நிலையில் மகளிர் திட்டத்தின் மூலம் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் இந்த தொற்று நோயிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள கிருமிநாசினி மற்றும் முகக்கவசங்கள் ஆகியவற்றைத் தயாரித்து குறைந்த விலையில் விற்பனை செய்து வருகின்றனர்.

கோயமுத்தூர் மாவட்டத்தில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் கொரோனா வைரஸ் தடுப்பு பொருட்களை கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்பு விற்பனை செய்வதற்கான விற்பனையகத்தினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் துவக்கி வைத்தார். இந்நிகழ்வின்போது கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கு. இராசாமணி, இ.ஆ.ப., மற்றும் ஊரக / நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. கு. செல்வராசு மற்றும் சுய உதவிக் குழுவினர் உடனிருந்தனர்.

இந்நிகழ்வில் போது கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறுகையில், "கோவை மாவட்டத்தில் மகளிர் திட்டத்தின் மூலம் சுய உதவிக் குழுக்கள் குறைந்த விலையில் தரமான கிருமிநாசினி, கைகழுவும் திரவம், சோப் ஆயில் மற்றும் முகக்கவசங்கள் போன்றவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். மேற்படி பொருட்கள் தேவைப்படுவோர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள மகளிர் திட்ட அலுவலகத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்' என்று தெரிவித்தார்.

கோவை மாவட்ட திட்ட இயக்குநர் திரு. கு. செல்வராசு அவர்கள் கூறுகையில், "தற்போது கோவை மாவட்டத்தில் 24 மகளிர் சுய உதவிக் குழுவினர் துணியால் ஆன முகக்கவசம் மற்றும் சர்ஜிக்கல் முகக்கவசம் என இரண்டு விதமாக முகக்கவசங்களை உற்பத்தி செய்கின்றனர். நாளொன்றுக்கு 15 ஆயிரம் முகக்கவசங்கள் தயாரிக்கப்படுகின்றன.

இந்த முகக்கவசங்களை அதன் தன்மைக்கு ஏற்ப ரூ. 8/- முதல் ரூ. 15/- வரை விற்பனை செய்கின்றனர்.

கோவை போக்குவரத்துக் கழகம், அரசு மருத்துவமனை மற்றும் இதர அலுவலகங்கள் ஆகியவை தங்களுக்குத் தேவையான கிருமிநாசினி மற்றும் முகக்கவசங்களை சுய உதவிக் குழுக்களிடம் கொள்முதல் செய்கின்றனர். மேலும் ரேஸ்கோர்ஸ், காந்திபுரம், சிங்காநல்லூர், உக்கடம் மற்றும் டவுன்ஹால் உள்ளிட்ட பகுதிகளில் விற்பனை அரங்கு அமைத்து சுய உதவிக் குழுவினர் குறைந்த விலையில் தரமான கிருமிநாசினி மற்றும் முகக்கவசங்களை விற்பனை செய்து வருகின்றனர்.

கோவை மாவட்டத்தில் 70 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சுமார் 700 உறுப்பினர்கள் கிருமிநாசினி, முகக்கவசம், பினாயில், சோப் ஆயில் மற்றும் கைகழுவும் திரவம் ஆகியவற்றை தயாரித்து, சுகாதாரத் துறையின் துணை இயக்குநரிடம் மாதிரி ஒப்புதல் பெற்று விற்பனை செய்து வருகின்றனர். 07.05.2020 வரை 4,50,000 முகக்கவசங்கள், 2500 லிட்டர் கை கழுவும் திரவம் மற்றும் 700 லிட்டர் கிருமிநாசினி ஆகியவற்றை விற்பனை செய்துள்ளனர்.

இதுமட்டுமின்றி பொது இடங்களில் சமூக இடைவெளியின் நன்மைகள் குறித்து நியாய விலைக் கடை, உழவர் சந்தை, வங்கிகள் மற்றும் மளிகைக் கடை ஆகிய இடங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், வீடு வீடாக சென்று காய்கறிகள் விற்பனை செய்வது போன்ற பணிகளை சுய உதவிக் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்' என்று தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பங்களிப்பு

நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் தடுப்பு, பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் திட்டப் பணிகள் தொடர்பாக மாநில அளவிலான ஆலோசனைக் கூட்டம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில் 19.05.2020 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. கா. பாஸ்கரன் இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. த. ந. ஹரிஹரன், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் சி. என். மகேஸ்வரன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் டாக்டர் கே. எஸ். பழனிச்சாமி இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு. எஸ். பழனிச்சாமி, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் (பொ) முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ,ஆ,ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் (பணிகள்) திரு. பி. குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் டாக்டர் த. பிரபு சங்கர், இ.ஆ.ப., தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்ட தலைமை செயல் அலுவலர் திருமதி ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப., மாநகராட்சி, சென்னை குடிநீர் வடிகால் வாரியம், நகராட்சி நிர்வாக தலைமைப் பொறியாளர்கள் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் திட்ட இயக்குநர்கள் உட்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம்

புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா (COVID-19) பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கும் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலகங்களுக்கும், புதுக்கோட்டை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் வாயிலாக ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் செயல்படும் 7 மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள 111 உறுப்பினர்களைக் கொண்டு கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்க பயன்படும் முக கவசங்கள் தயார் செய்யப்பட்டு, ரூ.10/- விலைக்கு விற்பனை செய்யப்பட்டுவருகிறது.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் முக கவசம் தயார் செய்வதை மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் திரு.சி.விஜயபாஸ்கர் அவர்கள், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. பி. உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., ஆகியோர் பார்வையிட்டனர். இந்நிகழ்வின்போது புதுக்கோட்டை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திருமதி. அ.லலிதா மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 650 குடிசைப் பகுதிகளில் வசிக்கும் 25 இலட்சம் மக்களுக்கு மறு பயன்பாட்டுடன் கூடிய துணியாலான 50 இலட்சம் முகக் கவசங்கள் வழங்கும் பணியினை சிறப்பு அதிகாரி / வருவாய் நிர்வாக ஆணையர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., 14.05.2020 அன்று, சோழிங்கநல்லூர் மண்டலம், கண்ணகி நகரில் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு குழு அலுவலர் / நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. கா. பாஸ்கரன், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் (பொ) முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., தெற்கு வட்டார துணை ஆணையர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஷ், இ.ஆ.ப., உட்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்டம்

பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள மருத்துவம், சுகாதாரம், காவல் துறை மற்றும் வருவாய்த்துறையினருக்கு வழங்க 1,46,949 முகக்கவசம், 1,995 லிட்டர் கிருமிநாசினி, 625 முழு உடல் கவசம், 9,951 ஆயிரம் சோப்பு ஆகியவை தயாரித்து விநியோகிக்கப்பட்டுள்ளன.

மாவட்ட நிர்வாகத்தின் உத்தரவுபடி அரசுத் துறை அலுவலகங்களுக்கும், மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார அலுவலகங்களின் தேவைக்கேற்ப கொரோனா வைரஸ் தடுப்புப் பொருட்களான முகக்கவசம், சானிடைசர், கிருமிநாசினி மற்றும் சோப்பு ஆகியவை வழங்கப்பட்டுள்ளது. மேலும் அனைத்து வட்டார மேலாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் சுய உதவிக் குழுக்களுக்கும் மேற்படி பொருட்கள் வழங்கப்பட்டது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சார்ந்த மகளிர் சுய உதவிக் குழுவினரைக் கொண்டு கொரோனா நோய்த் தடுப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக மருத்துவர்கள் மற்றும் சுகாதார பணியாளர்களுக்கான பாதுகாப்பு உபகரணங்கள் தயாரிக்கப் படுகிறது. கோயம்புத்தூர் மற்றும் சென்னையிலிருந்து பெறப்பட்ட மூலப்பொருட்களைக் கொண்டு, பாரதிதாசன் சாலையிலுள்ள பூமாலை வணிக வளாகத்தில் தேசியப்பறவை, லெமன் ஆரஞ்சு ஆகிய இரண்டு குழுக்களை சேர்ந்த 12 உறுப்பினர்கள் பாதுகாப்பு உபகரணங்கள் தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்டு நாளொன்றுக்கு 400 செட் கவச உடைகள் தயாரித்து வருகின்றனர்.

இந்த கவச உடைகள் திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனைக்கு 1000 செட் மற்றும் பெரம்பலூர் மகளிர் திட்டத்திற்கு 1000 செட் வழங்கப்பட்டுள்ளது. மேலும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சு. சிவராசு, இ.ஆ.ப., அவர்களின் வழிகாட்டுதலுடன், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. நா. சரவணன் அவர்களின் உறுதுணையுடனும், உதவி திட்ட அலுவலர் திரு. ஆ. ஜூலியஸ் தியோடர் அவர்களின் மேற்பார்வையிலும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மூலம் கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம்

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் இணைந்து கொரோனா பேரிடர் காலத்தில் வேலை இழந்து வாழ்வாதாரம் பாதித்த நிலையில் உள்ள முதியவர்கள் மற்றும் மக்களுக்குத் தேவையான உணவு, அரிசி மற்றும் மளிகைப் பொருட்களை வழங்கினர். மேலும், கிராமங்களில் நோய் தொற்று பரவாமல் தடுக்க கிருமி நாசினிகளை தெருக்களில் தெளித்தனர்.

விருதுநகர் மாவட்டம்

விருதுநகர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள், விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் ஆகியோரின் ஆலோசனையின்படி, கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். விருதுநகர் மாவட்டத்தில் Employment through Skills Training & Placement (ESTP) மூலம் தையல் பயிற்சி பெற்ற சுய உதவிக் குழு மகளிரைக் கொண்டு ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட முகக் கவசங்களை தைத்து விருதுநகர் மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் காவல் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் கொரோனா வைரஸ் தொற்று குறித்த கள நிலவர கணக்கெடுப்பில் மகளிர் சுய உதவிக் குழுவின் 546 குழு உறுப்பினர்கள் வீடுதோறும் சென்று தகவல்களை சேகரித்து வருகின்றனர். மகளிர் சுய உதவிக் குழுவினர் வீதிதோறும் சென்று கொரோனா வைரஸ் குறித்தும் மற்றும் கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் சுகாதாரமாக தங்களைக் காத்துக் கொள்வது பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருவதுடன், தற்போதுள்ள தகவல் தொழில் நுட்பத்தின் உதவியுடன் கொரோனா பற்றிய விழிப்புணர்வு நிகழ்வுகளை மின்மதி (Min Mathi - Installed 8992) மற்றும் ஆரோக்கிய சேது (Aarogya Setu-installed 5261) செயலியின் மூலம் பெற்று பொது மக்களுக்கு பகிர்ந்து வருவதுடன், இயற்கையாகவே உடலின் நோய் எதிர்பாற்றலை இயற்கை உணவின் மூலம் அதிகரிப்பது குறித்தும் ஆலோசனைகள் வழங்கி வருகின்றனர். விருதுநகர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு களத்தில் செயல் வீரர்களாக தன்னலம் பாராமல் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் செயலாற்றி வருகின்றனர் என்பது மிகையில்லை.

நீலகிரி மாவட்டம்

நீலகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்கள் கூடலூர் வட்டார பகுதியில் உள்ள பழங்குடியினர் மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கினார்.

கிருஷ்ணகிரி மாவட்டம்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் 14 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 56 உறுப்பினர்கள் 18.03.2020 முதல் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைக்காக முக கவசங்கள் (Face Mask) மற்றும் கை சுத்திகரிப்பான் (Hand Sanitizer) போன்றவற்றை தயாரித்து மாவட்ட அளவிலான கட்டுப்பாட்டு அறை (Control Room) மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கியுள்ளனர். மேலும் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டது.

சேலம் மாவட்டம்

சேலம் மாவட்டத்தில் மகளிர் திட்டம், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவையுடன் மாவட்ட சுகாதாரத் துறை இணைந்து கொரோனோ வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சி. அ. ராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் மகளிர் திட்டம் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களை கொண்டு முககவசம் (Face Mask) மற்றும் கிருமிநாசினி (Sanitizer Handrups) ஆகியவற்றை தயார் செய்து சுகாதாரத்துறை மூலம் வழங்கிட மகளிர் திட்ட இயக்குநர் அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

அதன்படி செங்கந்தல் மற்றும் ஸ்ரீசாய் ஆகிய மகளிர் சுய உதவிக் குழுக்களைக் கொண்டு முககவசம் (Face Mask) தயாரிப்பதற்கும், மகாலட்சுமி மற்றும் உதயநிலா ஆகிய மகளிர் சுயஉதவிக்குழுக்களைக் கொண்டு கிருமிநாசினி (Sanitizer Handrups) தயாரித்திடவும் மகளிர் திட்ட இயக்குநர் திரு. செல்வக்குமார் அவர்கள் தகுந்த ஆலோசனை வழங்கினார்கள். தொடர்ந்து 19.03.2020 அன்று திட்ட இயக்குநர் அவர்களின் ஆலோசனைப்படி செங்கந்தல் மகளிர் சுயஉதவிக்குழுவிற்கு மூலப்பொருட்கள் கொள்முதல் செய்வதற்காக இந்தியன் வங்கி மைக்ரோசெட் கிளையில் வங்கி இணைப்பு ரூ.7.00 இலட்சம் நேரடி கடன் பெறப்பட்டு, முக கவசம் (Face Mask) மற்றும் கிருமிநாசினி (Sanitizer Handrups) ஆகியவற்றை சுகாதாரத் துறையிடம் வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

சேலம் மாவட்ட ஊரக / நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம் சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படும் கிருமி நாசினி மற்றும் முகக் கவசங்கள் தயார் செய்யும் மையங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்து அப்பொருட்களை தரமானதாகவும், சுகாதாரமான முறையிலும் தயார் செய்து, விற்பனை செய்வதற்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கினர். மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தயார் செய்த முககவசம் மற்றும் கிருமிநாசினி, சோப் ஆயில் போன்றவற்றை விற்பனை செய்வதற்காக சேலம் மாநகராட்சி பூமாலை வணிக வளாகத்திலும், மற்ற 4 நகராட்சிகளில் உள்ள அம்மா உணவகங்களிலும் அமைக்கப்பட்டுள்ள விற்பனை மையங்கள் மகளிர் திட்ட இயக்குநர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

சிவகங்கை மாவட்டம்

சிவகங்கை மாவட்ட மகளிர் திட்டம் மூலம் சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த வாணியங்குடி, சோழபுரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த பூவந்தி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த முல்லை மற்றும் கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கார்மேகம் ஆகிய ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் மூலம் பல்வேறு வகையான ஆடைகளை தயாரித்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்கள் வருமானம் ஈட்டி வருகின்றனர்.

கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கையாக அறிவிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவின் காரணமாகவும், நோய் தொற்று தடுப்பின் உபகரணமான முகக் கவசங்களின் தேவை அதிகரித்ததாலும் புதுக்கோட்டை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குனரின் ஆலோசனையின்படி மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலின்படி மேற்காணும் ஆயத்த ஆடை தயாரித்தல் அலகுகள் மூலம் முகக் கவசங்கள் தயாரிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி முகக் கவசங்கள் தயாரிப்பதற்கான மூலப்பொருள்களான பருத்தி துணிகள், நூல் மற்றும் நாடா ஆகிய பொருட்கள் மகளிர் திட்ட மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு மேற்காணும் அனைத்து ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் அலகு களுக்கும் பிரித்து கொடுக்கப்பட்டது. சமுதாய இடைவெளியுடன்,

நோய் தடுப்பு நடவடிக்கைகளுடன் மகளிர் சுய உதவி குழுக்களின் மூலம் மேற்காணும் அலகுகள் செயல்படுவது உறுதி செய்யப்பட்டது. மேலும், தயார் செய்யப்பட்ட முகக் கவசங்கள் மகளிர் திட்டம் மூலம் சேகரிக்கப்பட்டு, மாவட்டம் முழுவதும் தங்கு தடையின்றி கிடைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. நாள் ஒன்றிற்கு ஒவ்வொரு அலகின் வாயிலாக சுமார் 1500 முகக் கவசங்கள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ. 10/- என குறைந்த விலை நிர்ணயிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டது. மேலும் இந்த ஆடை தயாரித்தல் அலகுகள் வாயிலாக வெளிநபர்களின் மொத்த தேவைகளுக்கும் விற்பனை செய்து வருகின்றனர். மகளிர் திட்டம் வாயிலாக பொது சுகாதார துறை, ஊரக உள்ளாட்சி அமைப்புகள் (ஊராட்சிகள்/ பேரூராட்சிகள்), வங்கியாளர்கள், சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு பணியாளர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஆகிய அலுவலகங்களுக்கு முகக் கவசங்கள் விற்பனை செய்யப்பட்டது. இதுவரை 74,265 முகக் கவசங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனையும் செய்யப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்று ஊரடங்கு காலத்தில் முகக் கவசங்கள் தயாரித்தல் பணியினை மேற்காணும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பைச் சார்ந்த மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மிகவும் சிறப்பாக மேற்கொண்ட துடன் தங்களது வருமானத்தையும் உயர்த்தியுள்ளனர். கோரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட தங்களுக்கு வாய்ப்பளித்த சிவகங்கை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு ஆடை தயாரித்தல் அலகின் உறுப்பினர்கள் தங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

சுயம்பு பெண்ணே...!

கிருமி கரோனாவில் இருந்து மீள்வாய்!
கருத்த மேகத்தை நீ விலக்கிடுவாய்!
கனலாய் மதியோடு நீ மீண்டெழுவாய்!
சிறகுகள் விரித்து பறப்பாய்!
சிந்தனை சிற்பியாய் செயல்படுவாய்!
சங்கு சுட்டாலும் வெண்மையாய்!
சரிந்த பொருளாதாரத்தை சமன் செய்வாய்!
சுய தொழில் பலவன செய்திடுவாய்!
சார்ந்து சோம்பியிராமல் நீ சாதித்திடுவாய்!
பாரில் பல இன்னல்தான் தொடர்ந்திடினும்
பால் மாட்டிற்கு பலவகை உணவை நீ தந்திடுவாய்!
பசுமாடு பால் கறக்க வேண்டியாய்
பலநாளும் எத்தனை இன்னலை நீ பொறுத்திருப்பாய்!
பல்நோக்குடன் `ஆடு'ம் `கோழி'யும் நீ வளர்ப்பாய்!
பாரில் பாங்குடன் நீ பசி போக்கிடுவாய்!
பெண்ணே...!
பைம்பொழிலே...!
பகிர்ந்து உண்ணும் பகுத்தறிவே...!
பெட்டகமே...!
பசிப்பிணி தீர்க்கும் அருமருந்தே...!
அன்னமே...!
மின்னலாய் மீண்டெழுவாய்!
மக்கள் மனம் மீள தொழில் பசும்புரட்சி செய்வாய்!
மட்டிலா மரகதமே மண்ணில் விதைத்திடுவாய்!
மாசற்ற நெல்மணியை நீ தந்திடுவாய்!
மங்காத பல்கூட்டுத் தொழிலில் நீ பரிமளிப்பாய்!
மங்கிய பொருளாதாரத்தை நீ நின்று உயர்த்துவாய்!
மக்கும் குப்பையை மண்ணில் புதைத்திடுவாய்!
மக்கிய மரக் கழிவை உரமாக்கிடுவாய்!
மாற்றம் பல வந்திட்டாலும்! தோற்றம் பல மாறினாலும்!
கூட்டு முயற்சியால் நீ வென்றிடுவாய்!
தனித்திருப்பாய்...!
விழித்திருப்பாய்...!
விலகியிருப்பாய்...!
தன்னலமற்ற நீ முன்னேற்றிடுவாய்!
நிச்சயம் முன்னேறுவாய்!
தளர் நம் தாய்நாட்டை நீ மெருகேற்றிடுவாய்!
மாசில்லா கண்ணே...!
பெண்மணியே...!
மண்ணின் நல் உறவே...!
மங்காத நம் தேசத்தின்
அட்சய பாத்திரமே நீ தானம்மா...!

● க. சரஸ்வதி கணேசன்
கூடுதல் இயக்குநர் (திறன் வளர்ப்பு)
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

காஞ்சிபுரம் மாவட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ATM மையங்களை பயன்படுத்த வரும் பயனாளிகளுக்கு, கைகளில் COVID 19 தடுப்பு கை சுத்திகரிப்பு திரவம் வழங்கும் பணியில் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர். காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட பூக்கடை சத்திரம் பகுதியில் அமைந்துள்ள ATM மையத்தில் COVID 19 கை சுத்திகரிப்பு திரவம் வழங்கும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பி. பொன்னையா, இ.அ.ப., அவர்கள் வாழ்த்துகளை தெரிவித்தார்.

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டாரம், சோமங்கலம் ஊராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படும் செம்பருத்தி மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் COVID-19 பரவாமல் தடுப்பதற்குத் தேவையான முக கவசம் மற்றும் கை சுத்திகரிப்பு திரவம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இக்குழுவின் செயல்பாட்டினை பார்வையிட்ட காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஜி. ஸ்ரீனிவாச ராவ் அவர்கள் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

தூத்துக்குடி மாவட்டம்

தூத்துக்குடி மாவட்ட மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் 254 சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மூலம் பாதுகாப்பான முக உறை, லைசால், சோப் ஆயில் மற்றும் கிருமி நாசினி போன்றவை உற்பத்தி செய்யப்பட்டு, 403 கிராம ஊராட்சிகள், 19 பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி ஆகிய வற்றிற்கு வழங்கப்பட்டுள்ளன.மேலும் வாழ்வாதாரம் இன்றி வாழும் ஏழைக் குடும்பங்களை கருத்தில் கொண்டு மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் குறைந்த விலையில் பாதுகாப்பான முக உறை, ஆல்கஹால் கலந்த கையில் தேய்க்கிற கிருமிநாசினி (Hand Rub Sanitizer), சோப் ஆயில், லைசால் மற்றும் கவச உடைகள் அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு தயாரிக்கப்பட்டு, 'முத்துமா' என்ற பெயருடைய லேபிளுடன் (Brand Name) வழங்கப்படுகிறது.

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., ஆகியோரின் வழிகாட்டுதலில், தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி அவர்களின் மூலம் 12 ஊராட்சி ஒன்றியங்கள், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி களில் தற்காலிகமாக திறக்கப்பட்டுள்ள 17 கடைகளிலும், சிறப்பு மதி அங்காடிகளிலும், மகளிர் சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு பொருட்கள் தட்டுப்பாடின்றி மக்களுக்கு கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் கிராமப்புறங்களில் செயல்படும் சுய உதவிக் குழுக்களுக்கு கொரோனா தடுப்பு தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. சுய உதவிக் குழுக்களை ஊக்கப்படுத்தும் விதமாக ஊரக மற்றும் நகர்ப்புற சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை நகர்ப்புற வாழ்வாதார மையத்தின் மூலம் (City Livelihood Centre) விற்பனை செய்திடவும் வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது. இதன் மூலம் ஊரக மற்றும் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டம்

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு வங்கிகளின் மூலம் கோவிட் 19 சிறப்பு கடனுதவித் திட்ட செயலாக்க ஆலோசனைக் கூட்டத்தில் தஞ் சாவூர் மண்டல தடுப்புக் குழு கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு அரசு அருங்காட்சியக ஆணையர் திரு. எம். எஸ். சண்முகம், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு வங்கிக் கடனுதவிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வின் போது ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் திரு. பழனி, தஞ்சை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. மு. இராஜ மோகன் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளார் திரு. சீனிவாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

Empowering Lives

கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகளில் நகர்ப்புற வாழ்வாதார இயக்க சுய உதவிக் குழுக்களின் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள்

கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகளில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்களின் ஆலோசனையின்பேரில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொ) மற்றும் செயல் இயக்குநர் முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்களின் வழிகாட்டுதலில் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் நகர்ப்புற சுய உதவிக் குழுக்கள், கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்குப் பயன்படும் முகக் கவசங்கள், கிருமி நாசினிகள், கை கழுவும் திரவங்கள், கவச உடைகள் போன்றவற்றை தயாரித்து வருகின்றன. அக்குழுக்களின் ஆக்கபூர்வமான செயல்பாடுகள் குறித்து காண்போம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

கொரோனா வைரஸ் தடுப்பு கவச உடை தயாரிப்பில் ஈடுபட்டுள்ள சுய உதவிக் குழுக்கள்

கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் வைரஸ் தொற்றில் இருந்து காக்க முகக் கவசம், கிருமி நாசினி, கவச உடை போன்றவற்றை பயன்படுத்துகின்றனர். அவர்களுக்குத் தேவையான தடுப்புப் பொருட்களை சுய உதவிக் குழுக்களும் தயாரித்து வருகின்றனர். திருச்சிராப்பள்ளி நகராட்சியில் செயல்பட்டு வரும் லெமன் ஆரஞ்சு சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் கொரோனா வைரஸ் தடுப்பு கவச உடைகளை தயாரித்து வருகின்றனர். இக்குழுக்கள் தயாரிக்கும் கவச உடைகள் திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசு மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது. ரூ. 350/- மதிப்பில் உள்ள இந்த கவச உடைகள் தரமாக இருப்பதால் பெருமளவு விற்பனை ஆகியது. மே மாதம் 10ஆம் தேதி வரை 2800 கவச உடைகள் தயாரிக்கப்பட்டு, 9,80,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மதுரை மாவட்டம்

மகளிர் சுய உதவிக் குழுக்கள் வழங்கிய நிவாரண நிதி

கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்க தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேலும் இந்த கொரோனா வைரஸ் காலத்தில் வேலைவாய்ப்பை இழந்து, சுய வருமானத்தை இழந்து வாடும் ஏழை எளிய மக்களுக்குப் பல்வேறு நிவாரண உதவிகளை அரசு வழங்கி வருகிறது. இந்த நிவாரண உதவிகளுக்கு தமிழகம் முழுவதிலும் உள்ள தொழிலதிபர்கள், தொண்டுள்ளம் படைத்தவர்கள், நல்லுள்ளம் கொண்டவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் நிவாரண நிதிக்கு தாராளமாக பொருளுதவி வழங்கி வருகிறார்கள்.

இந்த உன்னத திட்டத்திற்கு தங்களின் பங்களிப்பையும் செலுத்தும் வகையில், மதுரை மாவட்டத்தில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுவினர் அனைவரும் தலா ரூ. 5/- வீதம் சேகரித்த 5.20 லட்சம் ரூபாயினை கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் நிவாரண நிதிக்கு வழங்கியுள்ளனர் என்பது அனைத்து சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கும் பெருமையளிக்கும் நிகழ்வாக உள்ளது.

திருவள்ளூர் மாவட்டம்

கோவிட்-19 தொற்றினை கட்டுப்படுத்தும் விதத்தில் முகக் கவசம், கிருமிநாசினி ஆகியவற்றை விற்பனை செய்யும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் விற்பனையகம்

திருவள்ளூர் மாவட்டத்தில் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பல்வேறு பொருட்களைத் தயாரித்து 'திருவீர்' என்ற பெயரில் விற்பனை செய்து வருகின்றன. கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக மேற்படி சுய உதவிக் குழுக்கள் முகக் கவசம், கைகழுவும் திரவம், கிருமிநாசினி போன்றவற்றை தயாரித்து, 'திருவீர்' என்ற பெயரில் விற்பனை செய்து வருகின்றன. இந்தப் பொருட்கள் பொதுமக்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள விற்பனையகத்தின் மூலம் விற்பனை செய்து வருகின்றனர். இந்த விற்பனை அரங்கிற்கு வருகை தந்த திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., பார்வையிட்டு, சுய உதவிக் குழுவினர் தயாரித்துள்ள பொருட்களைப் பார்வையிட்டு, அவர்களின் முயற்சிகளைப் பாராட்டியதுடன், மேலும் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளை வழங்கினார்.

மேற்படி சுய உதவிக் குழுக்கள், மே மாதம் 10ஆம் தேதி வரையில் 1,62,925 எண்ணிக்கையிலான முகக் கவசங்கள், 50 லிட்டர் கிருமிநாசினி திரவம் மற்றும் 10 லிட்டர் கை கழுவும் திரவம் ஆகியவற்றை தயாரித்து விற்பனை செய்துள்ளன.

திருநெல்வேலி மாவட்டம்

வீடு தேடி வரும் மளிகைப் பொருட்கள்

கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்கும் வகையில் பொதுமக்கள் தேவையின்றி வெளியில் செல்வதைத் தவிர்க்குமாறு தொடர்ந்து அரசாங்கத்தால் வலியுறுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்காக பொதுமக்கள் வெளியில் வரும் சூழ்நிலை ஏற்படுகிறது. இந்நிலையைத் தடுக்கும் வகையில் திருநெல்வேலி மாவட்டத்தில் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் ரூ. 1000/- மதிப்பில் ஒரு குடும்பத்திற்குத் தேவையான தரமான மளிகைப் பொருட்களை பேக்கிங் செய்து 'திருமதி' என்ற பெயரில் வீடுதோறும் சென்று விற்பனை செய்து வருகின்றனர்.

இதன் காரணமாக பொதுமக்கள் பொருட்களை வாங்க வெளியில் செல்லும் நிலை தவிர்க்கப்பட்டு, கொரோனா வைரஸ் தொற்று பரவும் நிலை தடுக்கப்படுகிறது. திருநெல்வேலி மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களின் இத்தகைய செயல்பாடு அனைவரின் பாராட்டுக்களையும் பெற்றுள்ளது.

தமிழ்நாடு
நகர்ப்புற
வாழ்வாதார
இயக்கம்
TAMIL NADU
URBAN
LIVELIHOODS
MISSION
Empowering Lives

FASHION

புதுக்கோட்டை மாவட்டம்

அச்சிடப்பட்ட துணிப்பைகள் தயாரிக்கும் அச்சுடம் அன்னையர் மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றிக் கதை

புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள பூமாலை வணிக வளாகத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் அச்சுடம் அன்னையர் மகளிர் சுய உதவிக் குழு வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் வெற்றி குறித்து அதன் உறுப்பினர்கள் கூறும்போது, "தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் செயல்பட்டு வரும் எங்கள் அச்சுடம் அன்னையர் மகளிர் சுய உதவிக் குழுவில் 20 உறுப்பினர்கள் உள்ளனர். குழுவின் சார்பில் வங்கிக் கணக்கு துவங்கி உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சேமித்து வந்தோம்.

குழுவின் சார்பில் சுய தொழில் மேற்கொள்ள விரும்பிய எங்களுக்கு, புதுக்கோட்டை மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் உதவியுடன், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தின் மூலம் புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள பூமாலை வணிக வளாகத்தில் குறைந்த வாடகையில் கடை ஒன்று வழங்கப்பட்டது.

சுய தொழில் மேற்கொள்ளத் தேவையான மூலதனத்திற்காக புதுக்கோட்டை யூனியன் வங்கியில் ரூ. 1,75,000/- கடனாகப் பெற்றோம். அத்தொகையைக் கொண்டு அச்சிடப்பட்ட துணிப் பைகள் தயாரிப்பதற்கான மூலப் பொருட்களான காடாத் துணிகளை திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய நகரங்களில் மொத்த விலையில் வாங்கி நேர்த்தியாகவும், தரமாகவும் துணிப் பைகளைத் தயாரித்து பை ஒன்றுக்கு ரூ. 10/- விலையில் உள்ளூர் கடைகள், வெளியூர் கடைகள் போன்றவற்றின் மூலம் விற்பனை செய்து வருகிறோம். தற்போது நெகிழி ஒழிக்கப்பட்டு விட்டதால் நாங்கள் தயாரிக்கும் துணிப் பைகளின் தேவை அதிகரித்துள்ளது.

இத்தொழில் மூலம் எங்கள் குழுவின் உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் கணிசமான வருவாய் கிடைக்கிறது. வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தவணைகளையும் தவறாமல் செலுத்தி வருகிறோம்" என்றனர்.

மேலும், "துணிப்பைகள் தயாரிப்பது குறித்து பிற சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கும் பயிற்சிகள் வழங்கி வருவதுடன், கூட்டு முயற்சியாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தை தொடர்பு கொண்டு கோணிப்பைகள் தயாரித்து வழங்கவும் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம். எங்களின் முயற்சி நிச்சயமாக வெற்றி பெற்று, எங்கள் வாழ்க்கைத் தரம் உயரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எங்களின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவி வரும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்றும் குறிப்பிட்டனர்.

கன்னியாகுமரி மாவட்டம்

தனி நபர் கடன் திட்டத்தால் கிடைத்த வாழ்வாதாரம்

கன்னியாகுமரி மாவட்டம், ரீத்தாபுரம் பேரூராட்சி, கூந்த குழிவிளையில் வசித்து வருபவர் மேரி ஸ்டெல்லா. வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பத்தைச் சேர்ந்த இவர், இப்பகுதியில் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் கதிர் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளார்.

இவர் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் தனி நபர் கடன் திட்டத்தின் கீழ் வங்கியின் மூலம் ரூ. 1,90,000/- கடனாகப் பெற்று, அத்தொகையைக் கொண்டு ஒரு ஜெராக்ஸ் இயந்திரம் வாங்கி சிறிய அளவில் சுய தொழிலை செய்யத் தொடங்கினார். இதன் மூலம் இவருக்கு தினந்தோறும் கணிசமான அளவில் வருவாய் கிடைக்கத் தொடங்கியது. தற்போது மேரி ஸ்டெல்லாவின் குடும்பம் பொருளாதார வளர்ச்சி பெற்று வருகிறது.

தனது வாழ்வாதார முன்னேற்றம் குறித்து மேரி ஸ்டெல்லா கூறும்போது, "கன்னியாகுமரி மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் கடன் பெற்று சுய தொழில் மேற்கொண்ட நான், தற்போது பொருளாதார வளர்ச்சி பெற்றுள்ளேன். இதனால் எனது குடும்பத்தின் வறுமையும் நீங்கியுள்ளது. இதற்குக் காரணமாக இருந்த தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டார்.

கடலூர் மாவட்டம்

கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகளில் கடலூர் மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களின் பங்களிப்பு

கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரையின்படியும், கடலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும் கடலூர் மாவட்டத்தில் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் செயல்படும் சுய உதவிக் குழு உறுப்பினர்களைக் கொண்டு கை கழுவுதல், சமூக இடைவெளியைக் கடைபிடித்தல் மற்றும் முகக் கவசம் அணிதல் போன்ற தனி மனித பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டது. தொடர் நடவடிக்கையாக கடலூர் மாவட்ட மகளிர் திட்டம் சார்பாக கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு நடவடிக்கையில் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளைச் சார்ந்த 2,225 மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் முகக்கவசம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை மகளிர் சுய உதவி குழுக்களால் 6,90,120 முகக்கவசம் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேலும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் வாயிலாக உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி கிருமிநாசினி 4,520 லிட்டர் தயாரிக்கப்பட்டு, ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள சுய உதவி குழு உறுப்பினர்கள் கடலூர், விருத்தாச்சலம், நெல்லிக்குப்பம், பண்ருட்டி, சிதம்பரம், புவனகிரி, அண்ணாகிராமம், கீரப்பாளையம், குறிஞ்சிப்பாடி, பரங்கிப்பேட்டை, மங்களூர், காட்டுமன்னார் கோவில் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 31 விற்பனை மையங்களில் முகக் கவசம் மற்றும் கிருமிநாசினி ஆகியவை பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது. அரசின் துறைகளுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் நியாயமான விலையில், முகக் கவசம் மற்றும் கிருமிநாசினி தட்டுப்பாடின்றி கிடைத்திட செய்தமையால் மகளிர் சுய உதவி குழுவினரின் பங்களிப்பு பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சிறப்பு கடனுதவி

திருவண்ணாமலை மாவட்டத்தில் கொரோனா பேரிடர் காலத்தில் வேலை இழந்து தங்களின் வாழ்வாதாரம் பாதித்த நிலையில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மகளிர் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களில் 420 மகளிர் சுய உதவிக் குழுவிலுள்ள 6300 நபர்களுக்கு 3.15 கோடி கடன் உதவி மற்றும் 234 குழுக்களுக்கு 11.83 கோடி நேரடி கடனாக திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பெ. சந்திரா, முன்னோடி வங்கி மேலாளர் திரு. இளவரசன் மற்றும் மண்டல மேலாளர் திரு. ஏ. இராஜராஜன் ஆகியோர் முன்னிலையில் வழங்கப்பட்டது.

முற்றக்

அன்புள்ள முற்றம் வாசகர்களே...

சுய உதவிக் குழுவின் ஊக்குனர் மற்றும் உறுப்பினர்களிடையே நடைபெறும் உரையாடல்கள் மற்றும் கேள்வி பதில்கள் வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்த விபரங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் முற்றக் கச்சேரி வெளி யிடப்படுகிறது. இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறோம். இனி முற்றக் கச்சேரிக்குள் போவோமா...

இடம்: சுய உதவிக் குழு ஊக்குநர் மதியின் வீடு

கதை மாந்தர்கள்: ஊக்குநர் மதி, உறுப்பினர்கள் பாலா, கீதா

பாலா - கீதா: *மதி அக்கா... மதி அக்கா...*

மதி: *வா... பாலா... வா கீதா... வாங்க... முதல்ல வெளியில இருக்கிற பைப்புல சோப்பு போட்டு உங்க கைகளை 20 வினாடி நல்லா தேய்ச்சி கழுவிட்டு வாங்க...*

பாலா -கீதா இருவரும் மதி சொல்வது போலவே கைகளை கழுவி விட்டு வருகின்றனர். மதி அவர்கள் இருவருக்கும் முகக் கவசங்களை தந்து அணிந்து கொள்ளச் சொல்லிவிட்டு தானும் ஒரு முகக் கவசத்தை அணிந்து கொள்வதுடன் மூன்று அடி இடைவெளி விட்டு அமரச் சொல்கிறார்.

பாலா: *என்னக்கா எதுக்கு எங்களை அவசரமா வரச் சொன்னீங்க? என்னத்துக்கு கைகளை கழுவச் சொன்னீங்க, முகக் கவசம் தரீங்க. நாங்க எங்க வீட்டில இருந்து தானே வரோம். எங்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று இருக்காது அக்கா.*

மதி: *கொரோனா வைரஸ் தொற்று இருந்தாலும் இல்லையென்றாலும், நாம அடிக்கடி நம்ம கைகளை நல்ல சோப்புப் போட்டு தேய்ச்சி கழுவ வேண்டும். அதோட முகக் கவசமும் அவசியம் அணிந்து கொள்ள வேண்டும். தனி மனித இடைவெளியையும் கடைப்பிடிக்கணும்.*

கீதா: *நாம வீட்டுக்குள்ள தானே இருக்கோம். நமக்கு எதுக்கு கைகளைக் கழுவணும்?*

மதி: *கீதா... நாம வெளியில போயிட்டு வரும்போது ஏதாவது பொருட்களை தொட்டு இருப்போம். அந்தப் பொருட்கள்ல கொரோனா வைரஸ் பரவி இருந்தா அது நம்ம மேலயும் பரவி விடும். நம்ம வீட்டுக்குள்ளும் வந்து விடும். அதனாலதான் அடிக்கடி கைகளைக் கழுவணும்.*

பாலா: *அது சரி அக்கா... முகக் கவசம் எதுக்கு?*

மதி: *அதாவது நாம தும்மும்போதும், இருமும்போதும் நம்மகிட்ட இருந்து வெளிவரும் நீர்த்திவலைகளில் கொரோனா வைரஸ் இருந்தா அது மற்றவர்களையும் பற்றிக் கொள்ளும். அதிலிருந்து தப்பிக்கத்தான் முகக்கவசம் அணிந்து கொள்ள வேண்டும்.*

பாலா: *அதெல்லாம் சரி அக்கா... எதுக்கு எங்களை தனித்தனியா உக்காரச் சொன்னீங்க?*

மதி: *அதாவது கொரோனா வைரஸ் ஒருத்தரிடம் இருந்து மற்றவருக்கு பரவாமல் இருக்க வேண்டும் என்றால் தனி மனித இடைவெளி மிக முக்கியம். நீங்க கடைக்கு போனாலோ வங்கிக்கு போனாலோ தனி மனித இடைவெளியை அவசியம் பின்பற்றணும்.*

கீதா: *இதெல்லாம் அவசியம் கடைபிடிக்க வேண்டுமா அக்கா?*

மதி: *ஆமா கீதா. கொரோனா வைரஸ் பரவாமல் இருக்க வேண்டும் என்றால் இதையெல்லாம் நாம அவசியம் செய்யணும்.*

பாலா: *இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி இருக்கணும் அக்கா...*

மதி: *இதைப்பத்தி அரசு உரிய ஆணை பிறப்பிக்கும் வரைக்கும் நாம கண்டிப்பா இதை கடைபிடிக்கணும்.*

பாலா: நம்ம அரசாங்கம் கொரோனா வைரஸ் தொற்று தடுப்புக்கு என்ன செய்ஞ்சிருக்காங்க அக்கா?

மதி: நம்ம மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் நடைபெறும் அம்மா அரசு கொரோனா வைரஸ் தொற்று தடுப்புக்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துகிட்டு வராங்க. அவரோட நடவடிக்கைகளுக்கு உறுதுணையா அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து சிறப்பா செயல்பட்டு வராங்க. நம்ம தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பாகவும் ஏராளமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துகிட்டு வராங்க.

கீதா: நம்ம மகளிர் சுய உதவிக் குழுவும் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையில இருக்காங்களா? அதப்பத்தி சொல்லுங்க அக்கா

மதி: கண்டிப்பா சொல்றேன். நம்ம ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் வழிகாட்டுதலோட செயல்படும் சுய உதவிக் குழுக்கள் கொரோனாவை தடுக்கப் பயன்படும் பொருட்கள் தயாரிக்கிறாங்க.

பாலா: அப்படியா...? என்னென்ன பொருட்கள தயாரிக்கிறாங்க?

மதி: கொரோனாவை தடுக்கும் முகக் கவசங்கள், கவச உடைகள், கிருமி நாசினிகள், கைகழுவும் திரவங்கள், சோப்புகள் போன்றவற்றை தரமான முறையில் தயாரித்து குறைவான விலையில் விற்பனை செய்கிறார்கள்.

கீதா: எந்த ஊருல அக்கா?

மதி: நம்ம தமிழ்நாட்டுல இருக்கற எல்லா மாவட்டத்திலேயும் சுய உதவிக் குழுக்கள் இந்தப் பொருட்களத் தயாரிக்கிறாங்க.

பாலா: பரவாயில்லையே...

மதி: அதுமட்டுமில்ல, மக்கள் தேவையில்லாம வெளியில போகக்கூடாதுன்னு வீட்டுக்குத் தேவையான தரமான மளிகைப் பொருட்களையும் குறைந்த விலையிலே வீட்டுக்கே கொண்டு வந்து தராங்க...

கீதா: அப்படியா... ரொம்ப நல்லாயிருக்கே...

மதி: கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க சுய உதவிக் குழுக்கள் செய்யும் பணிகளை அனைவரும் பாராட்டுறாங்க.

கீதா: சரி மதி அக்கா... கொரோனா தடுப்புக்கு நம்ம குழு சார்பா நாம என்ன செய்யலாம்?

மதி: நம்ம குழுவுல துணி தைக்கத் தெரிஞ்சவங்க முகக் கவசம், கவச உடை போன்றவற்றை தயாரிக்கலாம். கைகழுவும் திரவம், கிருமிநாசினி, சோப்பு போன்றவற்றை தயாரிக்கலாம். கொரோனா குறித்த விழிப்புணர்வு கொடுக்கலாம்.

பாலா: கொரோனா குறித்த விழிப்புணர்வை எப்படி கொடுப்பது?

மதி: பொதுமக்கள் கூடும் இடங்களான நியாய விலைக்கடைகள், ஏடிஎம்கள், வங்கிகள், சந்தைகள், கடைகள் ஆகியவற்றில் தனி மனித இடைவெளியை கடைப்பிடிக்கச் சொல்வது, முகக் கவசம் அணிந்து கொள்வது, தேவையில்லாமல் வெளியில் சுற்றுவதை தடுப்பது, அடிக்கடி கைகளை சோப்பு போட்டு நன்றாகக் கழுவுவது போன்ற செயல்பாடுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தலாம்.

பாலா-கீதா: கண்டிப்பா செய்யலாம் அக்கா...

மதி: மத்தவங்கள கடைப்பிடிக்க சொல்லுவது மட்டுமில்ல நீங்களும் இதை தவறாம கடைப்பிடிக்கணும். சரியா...

பாலா - கீதா: மத்தவங்க மட்டுமில்ல நாங்களும் எங்க குடும்பமும் இதை தவறாம கடைப்பிடிக்கிறோம் அக்கா.

மதி: ரொம்ப சந்தோசம். நாம இதெல்லாம் செஞ்சாலே கொரோனா பாதிப்பு நமக்கு வராமல் பாதுகாப்பாக இருக்கலாம், ஆரோக்கியமாக வாழலாம்.

பாலா, கீதா இருவரும் மதியிடம் விடைபெற்று, தங்களின் வீடுகளுக்குச் செல்கின்றனர்.

-முற்றக் கச்சேரி தொடரும்

Goverment Of India

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU GKY)

● ஜெ. கணேஷ் கண்ணா
கூடுதல் இயக்குநர் /முதன்மை இயக்கு அலுவலர் (DDU-GKY)

இந்திய நாடு இளையோர் நாடு என்றாலோ அல்லது உலகிலேயே இளமையான நாடு என்றாலோ அது மிகையாகாது. ஆம், இந்திய மக்கள் தொகையில் சுமார் 60 கோடி இளைஞர்கள் 25 வயதுக்குட்பட்டவர்களாகவும், சுமார் 40 கோடி இளைஞர்கள் 13-35 வயதுடையவர்களாகவும் உள்ளது வேறு எந்த நாட்டிற்கும் இல்லாத பெருமை ஆகும். இளையோர்கள் அதிகம் உள்ளது என்பது மதிப்பிட முடியாத பெரும் சொத்து என்பதுடன், நாட்டின் மனிதவளம் பெரும்பாலான ஆக்க சக்திகளுக்கு பயனுள்ளதாகவும், நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி திறனுக்கு பெரும் உதவியாகவும் அமையும்.

இருப்பினும் இந்தியாவின் மனிதவளம் முறையாக பயன்படுத்தப்படுவதில் சில இடர்பாடுகள் உள்ளன. இதற்காக மத்திய மாநில அரசுகளால் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை நாம் அறிவோம். இளைஞர்களின் வேலைவாய்ப்பிற்கும் அவர்களின் வாழ்வாதாரத் தேவையை பூர்த்தி செய்வதற்கும் பல்வேறு திறன்வளர்ப்பு பயிற்சி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக பாரதப் பிரதமரின் தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டம் (DDU-GKY) இளைஞர்களின் திறன் வளர்ப்பு தேவையைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு பிரத்யேகமான திட்டமாகத் திகழ்கிறது.

'ஊரக ஏழை இளைஞர்களை பொருளாதார ரீதியாக சுதந்திரம் உடையவர்களாகவும் மற்றும் உலகளவில் பொருத்தமான தொழிலாளர்களின் சக்தியாகவும் மாற்றப்படுவதே' இத்திட்டத்தின் நோக்கமாகும்.

திட்ட அறிமுகம்

மத்திய அரசின் 60% பங்களிப்புடனும், மாநில அரசின் 40% பங்களிப்புடனும், தமிழக அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் 'தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டமானது சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திட்டத்தின் பயனாளிகள்

'தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கீழ் பயிற்சி பெற கீழ்கண்ட தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.

- கிராம ஊராட்சிப் பகுதிகளில் வசிப்பவர்கள்.
- 18 முதல் 35 வயதுள்ளவர்கள்.
- வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் பிரிவைச் சார்ந்தவர்கள்.
- நலிவடைந்த பிரிவினர்கள், பழங்குடியினர்கள், விதவைகள், விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள், கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் திருநங்கைகள் ஆகியோர்களின் வயது வரம்பு 45 ஆகும்.

வறுமைக் கோட்டினர் என்பதற்கான ஆவணங்கள்

- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் கண்டறியப்பட்டுள்ள BPL (Below Poverty Line) பிரிவைச் சேர்ந்த குடும்பங்கள்.
- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், மக்கள் நிலை ஆய்வு (Participatory Identification of Poor) மூலம் கண்டறியப்பட்டு ஏழை/ மிகவும் ஏழைக் குடும்பங்கள்.
- பொது விநியோகத் திட்டத்தின் கீழ், வழங்கப்படும் அந்தியோதயா அன்ன யோஜனாவின் (AAY) கீழ் குடும்ப அட்டை கொண்ட மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த இளைஞர்கள்.
- சமூகப் பொருளாதார மக்கள் தொகைக் கணக்கெடுப்பு(SECC) மூலம் கண்டறியப்பட்ட குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்கள்.
- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் குடும்பங்கள்
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் (MGNREGA) கீழ் அடையாள அட்டை பெற்று, முந்தைய நிதியாண்டில் குறைந்தது 15 நாட்கள் பணி புரிந்தமைக்கான ஆதாரம் கொண்ட குடும்பத்தினர் ஆகியோர் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம்.

சிறப்பு பிரிவினர்

நலிவடைந்த பிரிவினருக்கு பயிற்சியில் கீழ்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- மொத்த இலக்கில் தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு 62% மலைவாழ் பிரிவினருக்கு 3% மற்றும் சிறுபான்மையினருக்கு 16% என ஒதுக்கப்பட்டுள்ளது.
- மொத்த இலக்கில் மகளிருக்கு 30% வரை பயிற்சி இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மேலும், 3% பயிற்சி இடங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

பயிற்சி நிறுவனங்கள்

மத்திய ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல் கையேட்டின்படி (Standard Operating procedure – SOP) நிரந்தரப் பதிவு எண் (PNR) பெற்று, அனுபவமுள்ள அரசு

சார்ந்த/ தனியார் தொழில் பயிற்சி நிறுவனங்கள் (PIA) தேர்வு செய்யப்பட்டு, அந்நிறுவனங்கள் மூலம் பயிற்சிகள் அளிக்கப்படும். தமிழகத்தில் இதுவரை 100-க்கும் மேற்பட்ட பயிற்சி நிறுவனங்களுக்கு 'தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்யா யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டு, பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

பயிற்சி விவரம்

செக்டார் ஸ்கில் கவுன்சில் (SSC) மற்றும் NCVT போன்ற அமைப்புகளின் மூலம் அனுமதி அளிக்கப்பட்டுள்ள 40 துறைகளில் பயிற்சி அளிக்கப்படும். குறிப்பாக சுகாதாரப் பாதுகாப்பு (Health Care), தொழில்நுட்ப சேவை (IT ITES) ஆடை வடிவமைப்பு (Apparel), கட்டுமானத் துறை, ஆட்டோமோடிவ், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் (Tourism & Hospitality) சில்லறை வணிகம், தளவாடங்கள் (Logistics), அழகுக்கலை, போன்ற எளிதில் வேலைவாய்ப்பு பெறும் துறைகளில் பெரும்பாலான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

வேலை வாய்ப்பு முகாம்

தமிழகத்தில் உள்ள 385 வட்டாரங்களில் ஒவ்வொரு வட்டாரத்திலும் பல்வேறு தனியார் தொழில் பயிற்சி மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் பங்கேற்புடன், வட்டார/மாவட்ட அளவில் வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டு, நேரடி வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படுகிறது.

திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

- பயிற்சியின் தரம் மற்றும் வேலைவாய்ப்பினை உறுதி செய்வதற்கான பிரத்யேகமாக உருவாக்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறை கையேடு (SOP) கடைபிடிக்கப்படுகிறது.
- பயிற்சியின் போது போக்குவரத்து, உணவு, தங்குமிடச் செலவு, சீருடை, பாடப் புத்தகங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படும்.
- பயிற்சியின் போது பணியிடைப் பயிற்சி (On Job Training) மற்றும் மென்திறன் பயிற்சி (Soft Skill) வழங்கப்படும்.
- பயிற்சியின் போது வரைப்பட்டிகை (Tablet Computer) கற்றல் பயன்பாட்டிற்கு அனைத்து மாணவர்களுக்கும் தினசரி பயன்பாட்டிற்கு வழங்கப்படும்.
- பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்யும் இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் குறைந்தபட்சம் ரூ.6,000/- மாத வருவாயுடன் வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படுவதுடன் குறைந்தது ஓராண்டு காலத்திற்கு பின்தொடர்பு மேற்கொள்ளப்படும். இருப்பினும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் DDU-GKY திட்டத்தின் கீழ் பயிற்சி பெறும் பயனாளிகளுக்கு குறைந்தபட்சம் ரூ.8000/- மாத வருவாயுடன் பணியில் அமர்த்திட வலியுறுத்தப்பட்டுள்ளது.

பணியில் சேர்ந்த பிறகு

- சொந்த மாவட்டத்திலேயே பணிபுரிந்தால் மாதம் ரூ.1000/- வீதம் 2 மாதங்களுக்கு ஊக்கத் தொகை பயனாளியின் வங்கி கணக்கில் வழங்கப்படும்.
- மற்ற மாவட்டங்களில் பணிபுரிந்தால் மாதம் ரூ.1,000/- வீதம் 3 மாதங்களுக்கு ஊக்கத்தொகை பயனாளியின் வங்கி கணக்கில் வழங்கப்படும்.
- சொந்த மாநிலத்தை விட்டு பிற மாநிலத்தில் பணிபுரிந்தால் மாதம் ரூ.1,000/- வீதம் 6 மாதங்களுக்கு ஊக்கத்தொகை பயனாளியின் வங்கி கணக்கில் வழங்கப்படும்.
- தொடர்ந்து பணிபுரியும் இளைஞர்களுக்கு மாதம் ரூ.50/- வீதம் 12 மாதங்களுக்கு கைபேசி ரீசார்ஜ் செய்து தரப்படும்.

தகவல் கல்வி தொடர்பு செயல்பாடுகள்

தொலைபேசி அழைப்பு மையம் (Dial a Job) - 044-30478047

மாநில இயக்க மேலாண்மை அலகானது இத்திட்டத்திற்கு சரியான பயனாளிகளை தேர்ந்தெடுத்து ஒருங்கிணைக்கும் பொருட்டு Dial A Job எனும் அழைப்பு மையத்தை செயல்படுத்தி வருகிறது. இவ்வழைப்பு மையம் அனைத்து வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை அழைப்பாளர்களுக்கு

- திட்ட விபரம் (DDU-GKY)
- மாவட்டங்களில் அமைந்துள்ள பயிற்சி நிறுவனங்களின் தொடர்பு விபரங்கள்.
- ஊரக இளைஞர்களுக்கு ஆலோசனை போன்ற தகவல்களை வழங்கி வருகிறது.

கூடுதல் விவரங்களுக்கு

பயிற்சிகள் குறித்து கூடுதல் விவரம் பெற்றிட ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாவட்ட இயக்க மேலாண்மை அலகு செயல்பட்டு வருகிறது. இவ்வலுவலகத்தைத் தொடர்பு கொள்வதன் மூலம் 'தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டம் குறித்து கூடுதல் விவரங்களைப் பெறலாம்.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் உணவுகள்

கொரோனா வைரஸ் தாக்கம், அதிகரித்து கொண்டே போகிறது. நோய் தாக்காமல் தடுக்க, கைகளை அடிக்கடி சோப்பு போட்டுநன்கு கழுவுவதும், உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து கொள்வதும் மட்டுமே தீர்வு. 'நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க, வைட்டமின் அதிகம் உள்ள காய்கறி, பழங்களை தினமும் உணவோடு சேர்த்து கொள்ளலாம்' என்கின்றனர் உணவியல் நிபுணர்கள்.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க செய்வதில், காய்கறி, பழங்கள் மற்றும் கீரை வகைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இன்றைய சூழலில் வைட்டமின் 'சி' அதிகம் உள்ள உணவுகளை எடுத்து கொள்வது நல்லது. சிட்ரஸ் நெல்லிக்காய், எலுமிச்சை, ஆரஞ்சு, சாத்துக்குடி, திராட்சை மற்றும் பெர்ரி வகைகளில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வைட்டமின் சி நிறைந்துள்ளது.

இவற்றை அடிக்கடி உட்கொள்வதன் மூலம், உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க முடியும். காலையில் எழுந்ததும் இளநீர், ஜூஸ் அல்லது மோர் குடிக்கலாம். அல்சர் இருப்பவர்கள், எலுமிச்சை போன்ற ஜூஸ்களை தவிர்ப்பது நல்லது. மதியத்துக்கு, காய்கறி சூப் உகந்தது. கூட்டு, பொரியல், சாம்பார் என இவற்றில் 2 வகை காய்கறிகளை உட்கொள்ள வேண்டும்.

இரண்டு நாட்களுக்கு ஒருமுறை, கீரை உணவுகள் அதிகம் எடுத்துக் கொள்ளலாம். அதிலும், பசலை கீரையில் வைட்டமின் சத்து அதிகம் உள்ளது. காபி, டீ, குளிர்பானங்கள், எண்ணெயில் வேகவைத்த உணவுகளை தவிர்ப்பது நல்லது. இரவு உணவுக்கு, ராகி, கோதுமை போன்ற சிறுதானிய உணவுகளை எடுத்துக் கொள்ளலாம். குறிப்பாக, தினமும் 3 லிட்டர் வரை நீர் ஆகாரம் சாப்பிடுவது மிகவும் நல்லது என்கின்றனர் நிபுணர்கள்.

உடலுக்கு குளிர்ச்சி தரும்

கேழ்வரகு வெங்காய ரொட்டி

கேழ்வரகு உடலுக்கு குளிர்ச்சி தரக்கூடியது. கேழ்வரகு, வெங்காயம் சேர்த்து சத்தான ரொட்டி செய்வது எப்படி என்று பார்க்கலாம்.

தேவையான பொருட்கள்:

கேழ்வரகு மாவு - 1 கப், பெரிய வெங்காயம் - 2, பச்சை மிளகாய் - 3, எண்ணெய் - 1 டேபிள் ஸ்பூன், மிளகாய் வற்றல் - 3, கறிவேப்பிலை, கொத்தமல்லி தழை, உப்பு மற்றும் தண்ணீர் - தேவைக்கேற்ற அளவு

தாளிப்பதற்கு: கடுகு - அரை டீஸ்பூன், உளுத்தம் பருப்பு - 1 டீஸ்பூன், எண்ணெய் - 1 டேபிள் ஸ்பூன்.

செய்முறை: வெங்காயம், பச்சை மிளகாய், கொத்தமல்லி ஆகியவற்றைப் பொடியாக நறுக்கி கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் கேழ்வரகு மாவை போட்டு அதனுடன் உப்பு சேர்த்து தண்ணீர் விட்டு சிறிது இளக்கமாகப் பிசைய வேண்டும். வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு, உளுத்தம் பருப்பு தாளித்து வெங்காயம், பச்சை மிளகாய், மிளகாய் வற்றல், கறிவேப்பிலை, கொத்தமல்லி ஆகியவற்றை சேர்த்து நன்றாக பச்சை வாசனை போகும் வரை வதக்கவும்.

வதக்கிய பொருள்களை கேழ்வரகு மாவுடன் சேர்த்து பிசைந்து 10 நிமிடங்கள் வைக்கவும். தோசைக்கல்லை அடுப்பில் வைத்து சூடானதும் எண்ணெய் தடவி மாவை கையில் எடுத்து, கல்லில் தட்டி இருபுறமும் எண்ணெய் விட்டு பொன்னிறமாக சுட்டு எடுக்க வேண்டும்.

சூப்பரான கேழ்வரகு வெங்காய ரொட்டி ரெடி. இந்த ரொட்டியை அனைவரும் விரும்பிச் சாப்பிடுவார்கள்.

குறிப்பு: எவ்வளவு அதிகம் வெங்காயம் போடப்படுகிறதோ அந்த அளவுக்கு வாசனையும் சுவையும் நன்றாக இருக்கும்.

கொரோனா தடுப்புப் பணியில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் பணிகள்

சிவகங்கை மாவட்டம்

சிவகங்கை மாவட்ட ஊரக புத்தாக்கத் திட்ட மாவட்ட அலுவலகத்தில் அனைத்து பணியாளர்களுக்கும், மாநில முதன்மை செயல் அலுவலர் அவர்களின் அறிவுரைபடியும், தமிழ்நாடு அரசு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் தகவலின்படியும் பணியாளர்களுக்குத் தடுப்பு நடவடிக்கைக் குறித்து விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. மேலும் சிவகங்கை மாவட்ட ஊரக புத்தாக்கத் திட்டம் சார்பில் துண்டு பிரசுரம் அச்சடிக்கப்பட்டு தேவக்கோட்டை வட்டாரத்தில் உள்ள சருகனி, பொன்னளிக்கோட்டை ஊராட்சிகளிலும், காளையார்கோயில் வட்டாரத்தில் மேலமங்களம், பருத்திக் கண்மாய் ஆகிய ஊராட்சிகளிலும் மானாமதுரை வட்டாரத்தில் உள்ள மாங்குளம், கத்திக்குளம், மிளகனூர் ஆகிய ஊராட்சிகளில் ஊர் கூட்டம் நடத்தி பொது மக்களுக்கு கொரோனா வைரஸ் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. தேவக்கோட்டை, காளையார் கோயில் மற்றும் மானாமதுரை வட்டார வளர்ச்சி அலுவலர்களுடன் இணைந்து பேருந்து நிலையம், பொது இடங்களில் மக்களுக்கு துண்டு பிரசுரம் அளித்து கைகழுவும் முறைகள் குறித்து மாதிரி விளக்கம் செய்து பணியாளர்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மக்கள் கூடும் சாலை ஓரங்களில் கொரோனா வைரஸ் விழிப்புணர்வு பதாகை அச்சிட்டு (பேனர்) ஒட்டப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம்

தூத்துக்குடி மாவட்டத்தில் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்ட அணியினர் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கப் பணியாளர்களும் இணைந்து ஆழ்வார்திருநகரி வட்டாரம், மழவராயநத்தம் ஊராட்சி, தூத்துக்குடி வட்டாரம், குமாரகிரி ஊராட்சி மற்றும் வெள்ளமடம் ஊராட்சியில் ஊராட்சி நிர்வாகத்துடன் இணைந்து கிருமி நாசினி தெளிக்கப்பட்டது. மேலும், மாப்பிள்ளையூரணி மற்றும் வெள்ளமடம் ஊராட்சியில் பொது மக்களுக்கு முகக் கவசம் வழங்கப்பட்டது.

மேலும், கொரோனா தடுப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள காவல்துறையினர் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு 100 முக கவசங்கள் மற்றும் கபசுர குடிநீர் வழங்கப்பட்டது. மேற்கண்ட நடவடிக்கையில் தூத்துக்குடி மாவட்ட தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டப் பணியாளர்கள் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கப் பணியாளர்கள் ஈடுபட்டனர்.

அன்னையர் தினத்தில்...

அளவில்லாத அன்புக்கோர்
அடையாளம்தான் அன்னை;
அற்புதமான உறவுக்கோர்
ஆதாரம் தான் அன்னை! - என்றும்
பிள்ளைகள் வாழ்வில் புன்னகை நிலைக்க
தன்னலம் துறந்து உழைப்பவள் அன்னை!
அய்யிரு திங்கள் மழலையைச் சுமக்கும்
நாள்முதல் தொடங்கும் அவளது தியாகம்!
மெய் இளைத்தாலும் மனம் களைத்தாலும்
குழந்தையைக் காக்கும் அவளது விவேகம்!!
பாலூட்டித் தாலாட்டி,
பலர்போற்றப் பண்பூட்டி - பிள்ளை
காலூன்றும் காலம் வரை
சலிப்பின்றி உழைப்பாள்!
பற்பலவாய் அறிவூட்டி
வாழ்க்கையிலே வழிகாட்டி
சமூகத்தில் உயர்ந்து நிற்கத்
துணையாக இருப்பாள்!!
ஆயிரம் தவறுகள் மனிதர்கள் செய்தும்
காத்து அருளும் பூமியைப் போல
ஆயிரம் அலட்சியம் பிள்ளைகள் செய்தும்
அன்பும் பாசமும் பொழிபவள் அன்னை!
காலம் காட்டும் பாதையிலே
பயணம் செய்யும் மனிதகுலம் - அதில்
நீதியும் நியாயமும் பண்பும் வளர
அன்னையரே என்றும் நல்ல நிலம்!
நாளும் குழந்தைக்கு அறிவூட்டி,
சமூக அமைதிக்கு வலிவூட்டி
ஊரும் உலகும் தழைத்தோங்க
அன்னையர் வளர்ப்பே மூல பலம்!!
அன்னை என்பவள்
உலகைக் காக்கும் ஆதிசக்தியாம்;
அனைத்திற்கு அவளே
அடிப்படையான மூலசக்தியாம்:
உன்னையும் என்னையும் உலகிற்களித்து - இந்த
மண்ணையும் மாண்பையும் ஆளும் சக்தியாம்!
அன்னைக்கு வணக்கம்
அனுதினமும் செய்வோம்! - அதற்கு
அன்னையர் தினம் ஓர் துவக்கம் என்போம்!!
பொன்னையும் பொருளையும்
விரும்பும் உலகில் - நாம்
அன்னை என்னும் சக்தியையும் போற்றுவோம்!

● ஜா. சம்பத்
முதன்மை செயலாக்க அலுவலர்
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

ஊரடங்கு நேரத்தில் உதவி கரம் நீட்டிய உழவர் உற்பத்தியாளர் குழு

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியத்தில் முத்தூர் வாணியங்குடி ஊராட்சி மேலக்காடு கிராமத்தில் செயல்பட்டு வரும் உழவர் உற்பத்தியாளர் குழுவில் உள்ள நமது திட்ட மக்கள் பங்கேற்புடன் கூடிய அணியினர் மற்றும் விவசாய சமூக வல்லுநர்களாக அடையாளம் காணப்பட்ட உறுப்பினர்களும் (SPARK) தோட்டக்கலைத் துறையின் மூலம் அனுமதி சீட்டு பெற்று வாடகை வாகனம் மூலம் கிராமத்தில் விளைந்த காய்கறிகளை உழவர் உற்பத்தியாளர் குழு மூலம் சேகரித்து, மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் மூலம் காய்கறிகளை தரம் பிரித்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டனர்.

காளையார் கோவில் ஒன்றியத்தின் சுற்றுவட்டார கிராமங்களுக்கு சென்று காய்கறிகளை விற்பனை செய்து விவசாயிகளுக்கும் உரிய விலை கிடைக்கச் செய்தனர். பொது மக்களுக்கும் தடையின்றி அவர்களின் இல்லங்களுக்கே சென்று தக்காளி, தர்பூசணி, பூணிக்காய், கத்தரிக்காய், வெண்டைக்காய், பப்பாளி, பச்சை மிளகாய், புடலைங்காய், பாகற்காய் போன்ற காய்கறிகளை விநியோகம் செய்தனர். அவர்களுடன் நமது திட்ட பணியாளர்கள் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு கொரோனா வைரஸ் விழிப்புணர்வாக ஆரோக்ய சேது கைபேசி செயலியினை பயன்படுத்துதல், சமூக விலகல், முகக் கவசம் கட்டாயம் அணிதல், சோப்பால் அடிக்கடி கைகளைக் கழுவுதல் மற்றும் கபசுர குடிநீர் அருந்துதல் போன்ற நடைமுறைகளைப் பின்பற்றவும் வலியுறுத்தப்பட்டது. உழவர்உற்பத்தியாளர் குழுவின் தலைவர் திரு. செல்வராஜ், செயலாளர் திரு. சிவக்குமார், பொருளாளர் திரு. கோபிநாத் அவர்கள் அனைத்து பணிகளையும் முன்னெடுத்து சென்று சிறப்பாக செயல்பட்டு செய்ய அரும்பணியாற்றியுள்ளனர். இவர்களுக்கு காளையார்கோவில் வட்டார தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் திருமதி. ஆ சத்தியா, உதவி அலுவலர் திரு. காளிமுத்து, துணை அலுவலர் மகேசன் ஆகியோர் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்துடன் இணைந்து, அனைத்து உதவிகளையும் அவ்வப்போது செய்து, அவர்களின் சமூகப் பணிக்குப் பேருதவியாக இருந்து வருகின்றனர்.

புதுக்கோட்டை மாவட்டம்

பணியாளர்களுக்கான விழிப்புணர்வு

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மாவட்ட மற்றும் வட்டாரப் பணியாளர்கள் அனைவருக்கும் 'கொரோனாவின் தாக்கம் மற்றும் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வு பயிற்சி' மாவட்ட அலுவலகத்தில் 17.03.2020 அன்று நடத்தப்பட்டது. இதில் கொரோனா வைரஸ் என்பது என்ன? உலக அளவில் கொரோனாவின் தாக்கத்தின் நிலை என்ன? கொரோனா வைரஸ் பரவுதலில் என்னென்ன நிலைகள் இருக்கின்றன? தற்காப்பு முறைகள் யாவை? போன்றவை குறித்து விரிவாக விளக்கப்பட்டது.

பொது மக்களுக்கான விழிப்புணர்வு

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் வட்டாரத்தில் உள்ள களங்குடி கிராம ஊராட்சியில் 2020 மார்ச் 10 மற்றும் 13 ஆகிய தேதிகளில் 'கொரோனாவின் தாக்கம் மற்றும் தற்காப்பு முறைகள்' குறித்த விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. மாவட்ட மற்றும் வட்டார அலுவலகங்களின் முகப்புகளில் பொதுமக்கள் பயன் பெறும் பொருட்டு கொரோனா விழிப்புணார்வு பதாகைகள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மாவட்ட மற்றும் வட்டார அலுவலக தகவல் பலகைகளில் 'கொரோனா பாதுகாப்பு நடவடிக்கைகள்' குறித்த விளக்கப் படங்கள் ஒட்டப்பட்டுள்ளது. அலுவலகங்களில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளாக கிருமி நாசினி தெளித்தல், கை சுத்திகரிப்பு திரவங்கள் அனைத்து மாவட்ட மற்றும் வட்டார அலுவலக நுழைவாயில்கள், கை கழுவும் இடங்கள் மற்றும் கழிப்பறை ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அலுவலகத்தில் மக்கள் கூடுவதை தவிர்க்கும் பொருட்டு மனுக்கள் மற்றும் புகார்களைப் பெற 'மனு / புகார் பெட்டி' அமைக்கப்பட்டுள்ளது.

பெருங்களூர் கிராம ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் வேலை செய்து வருபவர்களுக்கு கைகளைப் பாதுகாப்பாகக் கழுவுதல் குறித்து விளக்கப்பட்டது.

உடல் நிலையினை கண்காணித்துக் கொள்ளவும், கொரோனா பரவல் பற்றித் தெரிந்து கொள்வதற்காகவும் புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் செயல்படும் வட்டாரங்களான திருவரங்குளம், புதுக்கோட்டை, விராலிமலை மற்றும் அறந்தாங்கி ஆகிய வட்டாரங்களில் திட்டத்தின் பங்குதாரர்களாக இருக்கும் பணியாளர்கள், பயிற்றுனர், ஆதரவாளர்கள் மற்றும் பயனாளிகள் என பலதரப்பட்டோருக்கும் அரசின் 'ஆரோக்கிய சேது' செயலியைப் பற்றி விளக்கி அதனை பதிவிறக்கம் செய்து தங்களுடைய உடல் நிலையையும் தெரிவிக்கச் செய்யப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்ட தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மூலம் 1615 நபர்கள் தங்கள் உடல் நல நிலையினை ஆரோக்கிய சேது செயலி மூலம் தெரியப்படுத்தியுள்ளனர்.

திருப்பூர் மாவட்டம்:

திருப்பூர் மாவட்டம், உடுமலை ஒன்றியம், கணபதிபாளையம் ஊராட்சியில் வசித்து வரும் சிவரஞ்சனி, மல்லிகை மகளிர் சுய உதவிக் குழுவில் ஊக்குநராகவும், கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் செயலாளராகவும் பொறுப்பில் இருந்து வருகிறார்.

கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் தையல் பயிற்சி பெற்ற இவர், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டப் பயிற்சியில் கலந்து கொண்டு சமூக வல்லுநராகவும் உள்ளார். தற்போது இரண்டு தையல் இயந்திரங்கள் கொண்டு உள்ளூரிலேயே துணிகள் தைத்துக் கொடுத்து வருகிறார். தற்போது கொரோனாவின் தாக்கத்தில் அனைவரும் பாதுகாப்பாக இருப்பதற்கு முககவசமும் கையுறைகளும் அவசியம் என்பதை உணர்ந்து குறைந்த விலையில் முககவசங்களையும் கையுறைகளையும் தைத்துக் கொடுத்து வருகிறார். இதுவரை 5000 ற்கும் மேற்பட்ட முகக்கவசங்கள் மற்றும் கையுறைகள் தைத்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள், மருத்துவமனை ஊழியர்கள், மருந்துக் கடைகள், சுகுணா புட்ஸ், ஊராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு வழங்கி வருகின்றார். இதன் மூலம் தனக்கான வருவாயையும் கவனித்துக் கொள்ளும் சிவரஞ்சனி, இக்கட்டான சமயத்தில் தன்னால் இயன்ற சேவையினையும் வழங்க முடிகிறது என்பதனை நினைத்துப் பெருமை கொள்கின்றார்.

வீட்டில் இரு ! விலகி இரு! ! பாதுகாப்புடன் இரு !

சந்தையில் முந்தலாம் வாங்க...!

இன்றைய தொழில் நுட்பம்-காலத்தின் கட்டாயம்...!!

(நவீன விற்பனைச் சந்தைகள்)



மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்களுடைய பொருட்களை விற்பனை செய்ய காலத்திற்கு ஏற்றாற்போல தொழில் நுட்பத்தின் உதவியைப் பயன்படுத்தலாம். இத்தகைய டிஜிட்டல் மார்க்கெட்டிங்கில் மூலப் பொருட்கள் சேவையை சந்தைப்படுத்தலாம். ஆன்லைன் வழியாக பல டிஜிட்டல் மார்க்கெட்டிங்கை எவ்வித செலவும் இல்லாமல் செய்து கொள்ளலாம்.

சமூக ஊடகங்களில் சந்தைப்படுத்துதல்

இப்போது உள்ள தகவல் தொழில் நுட்ப உலகத்தில் பெரும்பாலோனோர் சமூக வலைத்தளங்களை SOCIAL MEDIA பயன்படுத்துகின்றனர். FACEBOOK, TWITTER, GOOGLE PLUS, WHATSAPP, LINKEDIN, PINTEREST, INSTAGRAM போன்றபல சமூக வலைத்தளங்களின் பக்கங்களில் பதிவிட வேண்டும்.

குறும்படம் மூலம் சந்தைப்படுத்துதல்

உங்களுடைய தயாரிப்பு மற்றும் சேவைகளைப் பற்றி கூறும் படங்களை நீங்களே வீடியோவை தயாரித்து அதை YOUTUBE, FACEBOOK AND VINE, DAILYMOTION AND VIMEO, SNAPCHAT, INSTAGRAM போன்ற பல தளங்களில் பதிவிடலாம். இதை முற்றிலும் எவ்வித செலவும் இல்லாமல் செய்யலாம்.

தேடல் பொறி செம்மைப்படுத்துதல்

நமக்கு எந்த தகவல்கள் வேண்டுமென்றாலும் பெரும்பாலும் கூகுள் போன்ற இணைய தேடுபொறிகள் (SEARCH ENGINE) மூலமே தேடுகிறோம். SEARCH ENGINE OPTIMIZATION மூலம் இணையதளத்தை தேடு பொறியின் முன்னணி பக்கத்தில் கொண்டு வரலாம்.

பொருள் விளக்கம் மூலம் சந்தைப்படுத்துதல்

தொழிலைப் பற்றிய விளக்கமாக எடுத்து சொல்வதையே CONTENT MARKETING என்று சொல்லலாம். இணையத்தளத்தில் (WEBSITE) சிறந்த உள்ளடக்கத்தை (CONTENT) பயன்படுத்துவது, அடிக்கடி நிறுவனம், தயாரிப்பு மற்றும் சேவை சார்ந்த கட்டுரைகளை வலைப்பதிவு மூலம் பதிவிடுவது பொருள் விளக்கம் மூலம் சந்தைப்படுத்துதல் எனப்படும்.

மின்னஞ்சல் மூலம் சந்தைப்படுத்துதல் (EMAIL MARKETING)

வாடிக்கையாளர்களுக்கு தயாரிப்பு மற்றும் சேவையைப் பற்றித் தெரியப்படுத்த அவர்களின் ஈமெயில் முகவரிக்குத் தகவல்களைஅனுப்புவது மின்னஞ்சல் மூலம் சந்தைப்படுத்துதல் ஆகும்.

பிரபலமானவர்களின் வலைதளம் மூலம் சந்தைப்படுத்துதல்

மிகவும் பிரபலமான, ஆளுமைமிக்க மனிதர்களை அணுகி, நம் தொழிலைப் பற்றி அவர்களின் சமூக வலைத்தள பக்கங்கள், BLOG, நெட்வொர்க்கிங் (NETWORKING), தொடர்புகள், புத்தகங்கள் ஆகியவற்றில் பகிரச் சொல்லலாம்.

செல்பேசி மூலம் சந்தைப்படுத்துதல்

பெரும்பான்மையானவர்கள் இணையத்தை மொபைல் மூலமே பயன்படுத்துகின்றனர். எனவே MOBILE MARKETING செய்வது தொழிலுக்கு மிகவும் அவசியமாகிறது.

உலக மயமாக்கலுக்குப் பிறகு சேவைகள் மற்றும் தயாரிப்புக்கான எல்லைகளுக்கு வரம்பு இல்லை. அனந்தலை கிராம ஊராட்சியில் தயாரிக்கப்படும் ஒரு பொருள் நேரடியாக அமெரிக்காவில் விற்பனை செய்கின்ற காலம் மிக விரைவில் வரும். அதற்கு மாறிவரும் தொழில்நுட்பம் கைகொடுக்கும்

– சு. தமிழ்மாறன், மாவட்ட செயல் அலுவலர்,
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம், வேலூர் மாவட்டம்

மே தினம்

மேதினியின் முதல் தினம்

உழைப்பவரை உயர்த்தி வைக்க
உதித்த தினம் மேதினம்
உலகமெல்லாம் வியந்து போற்றக்
கொண்டாடும் நல் தினம்
அடிமையல்ல உழைப்பவன்,
அவனே என்றும் தலைவனாம்-இதை
முரசறைந்து தெரிவிக்க முகிழ்த்ததிந்த மேதினம்
இரவு பகலாய் குறைந்த கூலிக்கு
உழைத்துக் களைத்த காலத்தில்
வர்க்கப் போராட்டம் பலப்பல நடத்தி
உரிமைகள் பெற்றவன் உழைப்பாளி
அடக்குமுறையோடு அதிகார வெறியை
அதிதீவிரமாய் எதிர்த்து நின்று
ஆண்டான் -அடிமைத் தத்துவ முறையை
ஒழித்து ஜெயித்தவன் உழைப்பாளி
சலுகை பெறுகின்ற உழைப்பாளி
அதிகமாகவே உழைப்பான்- தன்
முதலாளியின் மனம் மகிழ்ந்திட
நம்பிக்கையாய் இருப்பான்
வலுவான அடித்தளம் இருந்தால்
விரிசல்கள் என்றும் தோன்றாது
தெளிவாக இதை உணர்ந்துவிட்டால்
போராட்டங்களே கிடையாது
சூரியன் உழைக்காது போனால்
ஒளியுமில்லை; வழியுமில்லை
பூமி சுற்றாது நின்றால்
உயிருமில்லை; பயிருமில்லை
மனிதன் உழைக்காது இருந்தால்
வளமும் இல்லை; வளர்ச்சியுமில்லை
உழைப்பவனை மதிக்காது போனால்
அமைதியுமில்லை; மகிழ்ச்சியுமில்லை
அழகியநாடு, நகரங்கள் எல்லாம்
உழைப்பாளிகளின் அருந்தொண்டே!
சோலைகள், சாலைகள், ஆடையணிகலன்
எல்லாம் அவர்களின் கடும் உழைப்பே!
உண்ணும் உணவும் எண்ணும் எழுத்தும்
எல்லாம் உழைப்பவர் பெருங்கருணை!
அவர்களை மதித்து வாழ்த்தி மகிழ்தல்
பண்புடை மக்களின் முதல் கடமை!

● ஜா. சம்பத்
முதன்மை செயலாக்க அலுவலர்
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

22-ம்
ஆண்டில்
வெற்றிநடை
போடும்

முற்றம்

- **சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!**
- **முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின் ஆதரவை தாருங்கள்!**
- **முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!**

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு	ரூ. 180
இரண்டு ஆண்டு	ரூ. 360
மூன்று ஆண்டு	ரூ. 540

விளம்பரக் கட்டணம்

அட்டையின் 2-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் 3-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும். பரிசும் வழங்கப்படும்.

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
மேலாளர், முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம், 3வது மாடி,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கையில் கடலூர் மாவட்ட சமுதாய வல்லுநர்கள் (சுகாதாரம்) பெண் சுகாதார தன்னார்வலர்களின் பங்களிப்பு

கடலூர் மாவட்டம், காட்டு மன்னார் கோயில் வட்டம், ஆயன்குடி வட்டாரத்தில், வீடு வீடாகச் சென்று தொற்றா நோய்களை கண்டறிந்து, நோய் பாதிப்புள்ளவர்களை மருத்துவமனை சிகிச்சைக்கு பரிந்துரைக்கும் பணிகளில் 24 சமுதாய வல்லுநர்கள் பெண் சுகாதார தன்னார்வலர்களாக கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் வாயிலாகத் தேர்வு செய்யப்பட்டு, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையின் கீழ் தன்னார்வமுடன் தங்களுடைய பணியினை செம்மையாக அனைவரும் பாராட்டும் வகையில் மேற்கொண்டு வருகின்றனர். கொரோனா வைரஸ் பரவி வரும் இந்த அசாதாரண சூழ்நிலையில், சிறிதும் சோர்வடையாமல் முறையான பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றி சுகாதாரத் துறை அலுவலர்களுடன் இணைந்து கொரோனா தடுப்பு நடவடிக்கை பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு வருகின்றனர். வழிகாட்டு நெறிமுறைகளுடன் தொற்றா நோய்களைக் கண்டறிந்து, தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் இவர்கள் தொடர்ந்து பேரிடர்களை சந்தித்து வரும் கடலூர் மாவட்டத்தில் எவ்விதமான சுகாதாரம் சார்ந்த பிரச்சனைகள் வந்தாலும் அவற்றை எதிர்கொள்ள தயார் நிலையில் உள்ளார்கள் என்பதை பெருமிதத்தோடு கூறலாம்.

இல்லத்தில் இருந்துப் பார்..!



இல்லத்தில் இருந்துப் பார்;
இரவும் பகலும் இதமாகத் தோன்றும்...!
இமைக்கும் பொழுதும் மெதுவாக நகரும்...!
தொலைக் காட்சிப் பெட்டியும்
தொல்லையாய் மாறும்...!
பிள்ளைகள் இருப்பின் பிரளயமே தோன்றும்...!
உணவு இடைவேளை குறையும்,
பசியின்றி பலதை உண்பாய்...!
நொறுக்குத் தீனிகளைக் கண்டால்
அதைப் பறக்க உண்பாய்...!
இல்லத்தில் இருந்து பார்...!
தூக்கம் உன்னை தழுவாது; -ஆனால்
மெத்தையை தழுவிக் கிடப்பாய்...!
குழந்தைத் தனம் வெளிப்படும்,
குறும்புத் தனம் செய்வாய்...!
ஊரடங்கி நின்றாலும்
ஊர் சுற்ற நினைப்பாய்...!
வீதியைப் பார்த்தால் பீதியில் திரும்புவாய்...!
அண்டை வீட்டுக்காரன் அறிமுகம் ஆவான்...!
உன்னிடம் சண்டை போட்டவன் கூட
சமாதானம் ஆவான்...!
இல்லத்தில் அமைதியாய் இருந்துப் பார்...!
இரண்டு நாட்கள் செல்வது
இமயமலையை கடப்பதாய் தோன்றும்...!
இரவில் விழித்திருப்பாய்;
பகலில் படுத்திருப்பாய்...!
பிடித்த உணவு மூடியிருந்தால்
பித்துப் பிடித்தவன் போல் உணர்வாய்...!
சமைத்த உணவையே சமைப்பதால்
சலித்துக் கொண்டே இருப்பாய்...!
ஓடி ஓடி காணாத அமைதியை
ஓரிடத்தில் இருக்கக் காண்பாய்...!
ஆனாலும் உன் சிறகை விரித்து
வெளியே பறந்து செல்வதுதான்
மகிழ்ச்சி என்று துள்ளிக் குதிப்பாய்...!
தனித்திரு... விழித்திரு... வீட்டில் இரு...
கொரோனாவை விரட்டி இரு...!
கொரோனாவை ஒழிப்போம்.

● மு. ரமேஷ்,
உதவி வள மேலாளர், TNVRC - NRO

கொரோனா வைரஸை வெல்வோம்...

கொரோனா வைரஸ் இன்று அண்டார்டிகா தவிர உலகின் அனைத்து கண்டங்களிலும் பரவிவிட்டது. இந்த வைரஸ் தொற்றால் இதுவரை உலகளவில் லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் அதிக அளவில் உள்ளது.

இந்த வைரஸ் உடலை எப்படி தாக்குகிறது? இதற்கு எப்படி சிகிச்சை அளிக்கப்படுகிறது? இந்த நோய் நம்மை தாக்காமல் இருக்க முன்னெச்சரிக்கையாக என்ன செய்ய வேண்டும்? என்பதை இக்கட்டுரையில் பார்க்கலாம்.

நோய் எப்படி பரவும்?

நோய் பாதிக்கப்பட்ட ஒருவரின் சுவாச குழாயில் இருந்து வெளியேறும் நீரின் மூலம் இந்நோய் மற்றவருக்கு பரவும். நோய் பாதிக்கப்பட்ட ஒருவர் மூலம் பரவிய வைரஸ் இருக்கும் பொருளையோ, இடத்தையோ, மேற்பரப்பையோ மற்றவர் தொட்டு, அவர் கைகளால் மூக்கு, கண், காது ஆகியவற்றைத் தொடும்போது அவருக்கும் நோய் பரவிவிடும்.

யார் பாதிக்கப்படுகிறார்கள்?

இந்த நோயால் அனைத்து வயதினரும் பாதிக்கப்படுவர். குறிப்பாக, 80 வயதுக்கு அதிகமானோர் கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பிற்கு ஆளாகும் அபாயம் அதிகம் உள்ளது.

மத்திய சுகாதாரத் துறை வழிகாட்டுதல்படி, சாதாரண, நடுத்தர அல்லது கடுமையான காய்ச்சல் இருப்பவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. மாரடைப்பு மற்றும் நீரிழிவு நோய் உள்ளவர்களையும் கொரோனா வைரஸ் தொற்று பாதிக்கும் வாய்ப்புகள் உள்ளன.

நோய்க்கான அறிகுறிகள்

ஆரம்ப கட்டத்தில் சில அறிகுறிகளை வைத்தே கொரோனா வைரஸ் தொற்றை நம்மால் அறிந்து கொள்ள இயலும். தொடர்ச்சியாக மூக்கு ஒழுகுதல் (சாதாரண சளி என நினைக்க வேண்டாம்). சுவாசக் கோளாறு, தொண்டை கரகரப்பு, தீராத தலைவலி, வறட்டு இருமல், மூச்சுவிட சிரமம் ஏற்படுதல், தொடர்ச்சியாக காய்ச்சல், உடல் சோர்வாக இருப்பது போன்ற அறிகுறிகள் தான் ஆரம்ப கட்டத்தில் இருக்கும்.

எனவே நீங்கள் இதை சாதாரண காய்ச்சல் என எண்ண வேண்டாம். இது போன்ற உடல் உபாதைகள் உங்களுக்கு இருந்தால் உடனடியாக நீங்கள் மருத்துவரை அணுகுவது நல்லது. ஆரம்ப காலத்தில் கண்டறிந்து விட்டால் இது குணமடையவும் வாய்ப்பு இருக்கின்றது.

நோய் தொற்றை எப்படி கண்டறிவது?

'பாலிமரேஸ் செயின் ரியாக்ஷன் (PCR)'சோதனை மூலம் வைரஸ் தொற்றைக் கண்டறியலாம். இது டிஎன்ஏ ஆய்வின் மூலம் செய்யப்படும் சோதனை என்பதால் பாதிக்கப்பட்ட நபர் உடலில் வைரஸ் இருக்கிறதா என்பதை விரைவில் கண்டறியலாம்.

கொரோனா வைரஸ் தாக்குதலில் இருந்து காத்துக் கொள்வது எவ்வாறு?

கொரோனா வைரஸ் தொற்று ஆபத்தை குறைக்க ஆல்கஹாலில் தயாரிக்கப்பட்ட சானிடைசர் அல்லது சோப்பு போட்டு அடிக்கடி கைகளை கழுவ வேண்டும். பொருட்கள், சுவர், தரைத் தளங்களில் படியும் கொரோனா வைரஸ் சில மணி நேரம் முதல் ஒரு நாள் வரை உயிர் வாழும் திறன் கொண்டது. கண்ணுக்குத் தெரியாத அந்த வைரஸை கைகளால் தொடும்போது கைகளில் தொற்றிக் கொள்கிறது. அதன்பின் கைகளால் கண், வாய், மூக்கை தொடும்போது உடலுக்குள் வைரஸ் நுழைந்துவிடும். எனவே அடிக்கடி சோப்பு போட்டு கைகளைக் கழுவுவது கட்டாயமாகும்.

சோப் மூலம் கைகளைக் கழுவுதல்

நமது கைகளின் இடுக்குகளில் வைரஸ், பாக்டீரியா கிருமிகள் படிந்திருக்கும். வெறும் தண்ணீரால் கைகளை கழுவும்போது கிருமிகள் முழுமையாக நீங்காது. சானிடைசர், சோப்பு போட்டு கைகளைக் கழுவும்போதுதான் கிருமிகள் அழியும்.

கொரோனா வைரஸ், எபோலா, ஜிகா உள்ளிட்ட வைரஸ்கள், கொழுப்பு சவ்வால் மூடப்பட்டுள்ளன. சோப்பு மூலக்கூறுகள் கொழுப்பு சவ்வையும், வைரஸையும் அழிக்கும் தன்மை கொண்டவை. அதனால்தான் வெறும் தண்ணீரால் கைகளைக் கழுவினால் போதாது. சோப்புப் போட்டு கைகளைக் கழுவ வேண்டும்.

ஆல்கஹால் மூலம் தயாரிக்கப்பட்ட கை கழுவும் திரவம்

வைரஸை மூடியிருக்கும் காளான் வடிவிலான கொழுப்பு சவ்வில் புரோட்டின் உயிர் அணுக்கள் உள்ளன. இந்த புரோட்டீன், மனித உடல் செல்லுக்குள் கொரோனா வைரஸ் நுழைய உதவுகிறது. சோப்பை போலவே சானிடைசர்களும் வைரஸின் கொழுப்பு சவ்வை அழித்து, வைரஸையும் அழிக்கிறது. எனினும் சானிடைசர்களில் கண்டிப்பாக 60 சதவீத ஆல்கஹால் இருப்பது அவசியம்.

முகக் கவசம் பயன்படுத்துதல்

கொரோனா வைரஸ் தொற்று பரவலை முகக் கவசம் தடுக்கிறது. எனினும் முகக் கவசத்தை முறையாக அணிய வேண்டும். மனிதர்கள் மூலம் மனிதர்களுக்கு வைரஸ் பரவும் ஆபத்தை முகக் கவசம் குறைக்கிறது. வைரஸ் தொற்று பரவல் அதிகமாக இருக்கும்போது முகக்கவசம் அணிவதை ஊக்குவிக்க வேண்டும். கொரோனா வைரஸ் தொற்றுள்ள பகுதிகளில் முகக் கவசம் அணிந்து கொள்வது வைரஸ் தொற்றை தடுக்க உதவும். தும்மும் போதும், இருமும்போதும் சிதறும் திவலைகள் மூலமே கொரோனா வைரஸ் பரவுகிறது. வைரஸ் தொற்றுள்ள நபர் முகக் கவசம் அணிந்திருந்தால், மற்றவர்களுக்கு வைரஸ் பரவும் அபாயம் குறையும். கொரோனா வைரஸ் தொற்றிய ஒருவருக்கு காய்ச்சலுக்கான அறிகுறிகள் தென்படும் முன்பே மற்றவர்களுக்கு அவர் வைரஸை பரப்பத் தொடங்கி விடுகிறார் என்று பல்வேறு ஆய்வுகளில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனவே வைரஸ் அதிகமாக பரவும் பகுதிகளில் முகக் கவசம் அணிவது அவசியமாகிறது.

இந்தியா போன்ற நாடுகளில் ஒருவருக்கொருவர் ஒரு மீட்டர் இடைவெளியைக் கடைப் பிடிப்பது மிகப் பெரிய சவாலாகும். எனினும் மக்கள் புரிந்து வைத்துக் கொண்டு ளுடிஉயைட னுளைவயஸீஉவீபே என்ற முறையை கடை பிடித்தல் சிறந்தது.

மற்றவர்களிடம் இருந்து விலகி இருத்தல்



ஒருவர் தும்மினாலோ, இருமினாலோ அவரிடம் இருந்து ஒரு மீட்டர் (3 அடி) தொலைவு தள்ளி இருக்க வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு அறிவுறுத்தியுள்ளது. தும்மும் போதும், இருமும் போதும் மூக்கு, வாயில் இருந்து சிதறும் திரவ துளிகளில் கொரோனா வைரஸ் நிறைந்திருக்கும். அருகில் உள்ளவர்கள் அந்த திரவ துளிகளை சுவாசித்தால் அவர்களுக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படும் என்பதால் ஒருவருக்கொருவர் 3 அடி தூரம் விலகி இருக்க வேண்டும்.

கண், மூக்கு, வாய் ஆகியவற்றை தொடாமல் இருத்தல்

கதவு கைப்பிடி உள்ளிட்ட பல்வேறு பொருட்கள், சுவர், தரைத்தளங்களில் கொரோனா வைரஸ் படிந்திருக்கும். அவற்றை நீங்கள் கைகளால் தொடும்போது உங்கள் கைகளில் வைரஸ் தொற்றிக் கொள்ளும். அதன் பிறகு நீங்கள் கண், மூக்கு, வாயை கைகளால் தொடும்போது உடலுக்குள் கொரோனா வைரஸ் நுழைந்து காய்ச்சலை ஏற்படுத்தும்.

கைக்குட்டையைப் பயன்படுத்துங்கள்

தும்மும்போதும், இருமும்போதும் முழங்கையால் முகத்தை மூடிக் கொள்ள வேண்டும் அல்லது கைக்குட்டையால் முகத்தை மறைத்துக் கொள்ள வேண்டும் அல்லது டிஸ்யூ பேப்பரால் முகத்தை மூடிக் கொள்ள வேண்டும். பயன்படுத்திய டிஸ்யூ பேப்பரை எரித்து விடுவது நல்லது.

குடைகளைப் பயன்படுத்துதல்

எந்த ஒரு இடத்திற்கு சென்றாலும், அது வெயில் காலம், மழைக் காலம், குளிர் காலம் என எதுவாக இருந்தாலும், குடையை கையில் பிடித்தபடி செல்லுங்கள். இதன் மூலம் இயல்பாகவே இரண்டு நபர்கள் இடையே குறைந்தபட்சம் இரண்டடி இடை வெளி கிடைக்கும். இதன் மூலம் கொரோனா வைரஸ் தொற்றி லிருந்து நம்மைக் காத்துக் கொள்ளலாம்.

கீழ்கண்ட மூன்று விஷயங்களை எப்போதும் கடைபிடிப்பதன் மூலம் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ள முடியும். முகத்தில் எப்போதும் மாஸ்க் அணிந்திருப்பதை பழக்கப்படுத்துங்கள். இப்போதெல்லாம் உடைகளுக்கு மேட்சிங்காக மாஸ்க் வர ஆரம்பித்துவிட்டது. ஆண்களும், பெண்களும், இப்படி மேட்சிங் மாஸ்க் அணியலாம். கையில் எப்போதும் சானிட்டைசர் மற்றும் குடை வைத்திருத்தல், செல்போன் பயன்பாட்டை தவிர்த்தல், மாஸ்க் அணிதல், ஆகிய இந்த மூன்றும், கொரோனா வைரசுக்கு, தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் வரை, வைரஸ் பாதிப்பில் இருந்து தப்பிப்ப தற்கான உற்ற உபாயமாகும்

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,
Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029.
Published from (77,100 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,
Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN

**எங்கள் வாழ்வும், எங்கள் வாழ்வாதாரமும்,
எங்கள் கையில் என சங்கே முழங்கு!**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
Empowering Lives

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் திட்டத்தின் மூலம்,
நகர்ப்புற ஏழை, எளிய மக்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நகர்ப்புற வீடற்றோருக்காக
பல்வேறு திட்டங்களைத் தீட்டி தமிழக அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருவது
பெருமைக் குரியது.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2018-2020 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2018-2020
Date of Publication : 1st Week of the every month

सत्यमेव जयते
Goverment Of India

DDU-GKY
Deen Dayal Upadhyaya
Grameen Kaushalya Yojana
Empowering India • Powering the World

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கீழ்

கிராமப்புற இளைஞர்களுக்கான
திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டம்

100%

வேலைவாய்ப்புக்கு

044-3047 8047

DDU-GKY
Deen Dayal Upadhyaya
Grameen Kaushalya Yojana
Empowering India • Powering the World

DEEN DHAYAL UPADHYAYA GRAMEEN KAUSHALYA YOJANA (DDU-GKY)

TAMIL NADU STATE RURAL LIVELIHOODS MISSION,
Tamil Nadu Corporation for Development of Women,
Mother Theresa Womens Complex - 3rd floor, Valluvar Kottam High Road,
Nungambakkam, Chennai - 600 034. Phone : 91-44-2817 3415
E-mail : ddugkytn2016«gmail.com / cooddugkytn«gmail.com